




# தமிழரசு

1.12.1995 ரூ.3


தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
'கலைமாமணி' விருது வழங்கும் விழா
கலைவாணர் அரங்கம் - 22-11-95
கலைமாமணி
விருது
1995

# இந்த இதழில்...






துரித ரயில் திட்டம் ஒரு சரித்திரச் சிறப்பு வைபவம் - மாண்புமிகு முதல்வர் உரை ....... 9

நிலைத்துப் புகழ் பரப்பும் விளையாட்டரங்கங்கள் ............................... 2

'கலைமாமணி' விருது வழங்கும் விழா ........................ 26

வியக்க வைக்கும் விளையாட்டு நகரம் ............. 39

தங்கமாய் வென்று குவிப்போம்! ........................ 41

தெற்காசிய விளையாட்டுப் போட்டி: தயாராகவுள்ள பதக்கங்கள் ... 47

தடகளப் போட்டி - இந்திய அணி ........................ 48




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. (32)

★ ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை; அறத்தைப் போற்றாமல் மறப்பதை விடக் கெடுதியானதும் இல்லை.


மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழா ............................................ 17





தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

கார்த்திகைத் திங்கள் : 15

மலர்: 26 இதழ்: 11

1.12.1995

விலை ரூபாய் : 3

# மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின்...



தமிழகத்து விளையாட்டுத் துறை வளர்ச்சியின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் இந்தியத் துணைக் கண்டத்திற்கு சர்வதேச அரங்கில் புகழ்பரப்பும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் டிசம்பர் மாதம் 18ஆம் நாள் முதல் 10 நாட்களுக்கு சிறப்பான முறையில் நடத்திட அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி செய்து வருகிறார்.

விளையாட்டு வீரர்கள் சர்வதேச அரங்கில் பங்கேற்க வேண்டுமென்றால், அவர்களுக்குத் திறமையும் முயற்சியும் மட்டுமே இருந்தால் போதாது, அவர்களுக்குப் பயிற்சி மேற்கொள்ள சர்வதேசத் தரமுள்ள விளையாட்டு அரங்கங்களும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளும் அமைத்து நடத்தப்பட வேண்டும் என்று விரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதுவரை தமிழ்நாட்டில் எந்த முதல்வரும் செய்யாத விளையாட்டுத்துறை வளர்ச்சிப் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சரித்திரச் சாதனையாகச் செய்து காட்டி வருகிறார். அவருடைய முயற்சியின் முதற் பயனாக, சென்னையில் அனைவரும் மகிழத்தக்க ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கை, ஏழே மாதத்தில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் அமைத்து, அங்கே சர்வதேச தடகளப் போட்டிகளையும், சர்வதேசக் கால்



# நிலைத்துப் புகழ்பரப்பும் விளையாட்டரங்கங்கள்



# ...தொலைநோக்குப் பார்வை



பந்தாட்டப் போட்டிகளையும், அனைவரும் வியக்கும் வண்ணம் வெகு சிறப்பாக நடத்திக் காட்டினார். அந்த வெற்றிப் பாதையின் தொடர்ச்சியாகத் தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதற்காகவும், தமிழ் நாட்டு வீரர் வீராங்கனைகள் சர்வதேசத் தரத்தில் பயிற்சிப் பெறுவதற்காகவும், சர்வதேசத் தரத்தில் ஏழு புதிய விளை யாட்டரங்கங்களையும், ஒலிம்பிக் விளையாட்டுகளின்போது அமைக்கப்படுகின்ற விளை யாட்டுக் கிராமத்தையும் கிட்டத் தட்ட ரூ.175 கோடி மதிப்பீட்டில் அமைத்துள்ளார்.

தமிழ்நாட்டு வரலாற்றில் ஒளிவீசும் தஞ்சைப் பெரிய கோவிலை அமைத்த இராஜராஜ சோழன் புகழைப் போலவும், கற்கோயில்கள் அமைத்த, மகேந்திரப் பல்லவன் புகழைப் போலவும், மதுரையிலே சிறப்புச் செய்யும் மீனாட்சியம்மன் திருக்கோயிலை அமைத்த நாயக்கர்கள் புகழைப்போலவும் தமிழக வரலாற்றில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் புகழை என் றென்றும் நிலைத்துப் பாட இந்த விளையாட்டு அரங்கங்கள் அமைந்து அங்கே பயிற்சிப் பெறும் விளையாட்டு வீரர் வீராங்கனைகள் சர்வதேச அரங்கில் புகழ்க்கொடி நாட்டு வதற்குப் பெரும் பணியாற்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அந்த விளையாட்டரங்கங் களுள் புதியதாக அமைக்கப் பட்ட ஏழு அரங்கங்களைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரை தரமுயலுகிறது.

**44 கோடி ரூ. மதிப்பில் நேரு அரங்கம்**
**40 ஆயிரம் பேர் இங்கே அமர்ந்து ரசிக்கலாம்**

### ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம்

இரண்டாண்டுகளுக்கு முன்னர் சர்வதேசத் தரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அரிய முயற்சியால் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் சென்னை மாநகராட்சிக் கட்டடத்தின் பின்புறம் அமைக்கப் பட்டுள்ளது. சர்வதேசத் தரத் திலான இவ்விளையாட்ட ரங்கத்தை ஏழே மாதத்திற்குள் ரூபாய் 44 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு வல்லுநர்கள் பாராட்டும் விதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அமைத்துள்ளார். இதில் கால்பந்து விளையாடுவதற் கேற்ற புல்தளமும், தடகளப் போட்டிகள் நடத்துவதற்கேற்ற செயற்கை இழையூட்டப்பட்ட

ஓடுதளமும் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

நாற்பதாயிரம் பார்வையாளர்கள் பார்க்கக்கூடிய வகையில் இருக்கை வசதிகள் இடம்பெற்றுள்ளன. இரவு நேரத்திலும் தெள்ளத்தெளிவாகக் காணக்கூடிய வகையில் சிறப்பு ஒளி வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வரங்கில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக்கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி,ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விளையாட்டரங்கில் ஏழாவது தெற்காசிய போட்டிகளின் போது தடகளப் போட்டிகள், டிசம்பர் 20 முதல் 24 வரையிலும், கால் பந்து போட்டிகள் டிசம்பர் 19 முதல் 27 வரையிலும் நடைபெற உள்ளன. தடகளப் போட்டிகளில் 240 வீரர், வீராங்கனைகளும், கால்பந்து போட்டிகளில் 133 வீராங்கனைகளும் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. இது தவிர, ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழாக்கள் நடைபெறவுள்ளன.

## டென்னிஸ் விளையாட்டரங்கம்

நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டத்திற்கருகே, 9.89 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.8.5 கோடி செலவில் சர்வதேசத் தரத்தில் டென்னிஸ் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இவ் வளாகத்தில் மொத்தம் ஏழு விளையாட்டுத் தளங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று மையமானதும் மற்ற ஆறும் பயிற்சிக்காகவும் அமைக்கப் பட்டுள்ளன. எல்லாவற்றிலும் சர்வதேசத் தரத்திலான டெக்கோ டர்ப் (Deco-Turf) அமைக்கப் பட்டுள்ளது. மையத் தளத்தில் பார்வையாளர்களுக்காக 5000 இருக்கைகளும், மற்ற தளங்களில் 2000 இருக்கைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

அரங்கினுள் மின்னணு அறிவிப்பு பலகை, பார்வையாளர்கள் எங்கிருந்தாலும் தடையின்றிப் பார்க்கும் படியான எண்கோண வடிவமைப்பு, விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக்கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி, ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. எதிரொலிக்காத ஒலி பெருக்கிகள், பார்வையாளர்களின் பார்வைக்குத் தடை செய்யாத உயரத்தில் அமைக்கப்

**உன்னத ஆட்டக்காரர்களை உருவாக்கும் தளம்**
**உலகத்தரமுடைய டென்னிஸ் ஆட்ட அரங்கம்**





**சீராட்டித் தமிழன்னை பெற்ற மக்கள்**
**நீர் ஆட்டம் ஆடிடவே நிறைவான நீச்சல் அரங்கம்**

பட்டுள்ளன. பாதுகாப்புக்கெனக் காவல் துறையினருக்காகத் தனியே ஒரு பாதுகாப்பு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் நடத்த முடியும் என்று, வல்லுநர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த விளையாட்டரங்கத்தில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் டிசம்பர் 19 முதல் 23 முடிய டென்னிஸ் போட்டிகள் நடைபெறவுள்ளன.

### வேளச்சேரி நீச்சல் குள விளையாட்டரங்கம்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் விளையாட்டு போட்டி நடைபெற சிறப்புமிகு வசதியாகவும், எதிர்காலத்தில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நீச்சலில் பயிற்சி பெற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சர்வதேசத் தரத்தில் 12 கோடி ரூபாய் செலவில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் குதிரைப் பந்தய மைதானத்திற்கருகில் நீச்சல் விளையாட்டரங்கம் வேளச்சேரியில் கட்டப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டரங்கில், மூன்று நீச்சல் குளங்கள் உள்ளன. அதில் ஒன்று 50 மீட்டர் நீளமும், 25 மீட்டர் அகலமும் 2 மீட்டர் ஆழமும் கொண்டுள்ளது. இன்னொன்று நீருக்குள் உயரத்திலிருந்து பாய்ந்து குதிப்பதற்கு 18 மீ.நீளமும், 25 மீ.அகலமும், 5.5 மீ. ஆழமும் மற்றொன்று 20 மீ. நீளமும், 25 மீ. அகலமும், 2மீ. ஆழமும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று குளங்களுமே சர்வதேச நீச்சல் சங்க (FINA Standard) விதிகளுக்கேற்ப கட்டப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெறுகின்ற சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓமேகா நிறுவனத்தால் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் மின்னணு அறிவிப்புப் பலகை அமைக்கப்பட்டுள்ளது. இது நீச்சல் வீரர்கள் கரையைத் தொட்ட மாத்திரத்திலேயே போட்டியின் முடிவைத் தெரிவித்துவிடும்.

இதுதவிர, நீருக்கடியில் ஒளி சிந்தும் மின் விளக்குகளும், நீருக்கடியிலிருந்து புகைப்படமெடுக்கும் வசதியும், ஆண் பெண் விளையாட்டு வீரர்களுக்கு, தனித் தனியான அறைகளும், அவர்களுக்கெனத் தனித்தனி நுழைவு வாயில்களும், ஓய்வு அறைகளும், முதலுதவி அறைகளும் பயிற்சியாளர், நடுவர், முக்கிய விருந்தினர்கள், செய்தியாளர்களுக்கான தனி அறையும், தொலைத் தொடர்பு வசதிகளும், தொலைக்காட்சி மற்றும் வானொலிகளுக்கான அறைகளும், உணவு அறைகளும் கட்டப்பட்டுள்ளன. பார்வையாளர்கள் அமர்ந்து வசதியாகப் பார்க்கும் வண்ணம் 4500 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### சிறப்பு வசதி

சிறப்பாக மேல்தளங்களுக்குச் சென்றுவர மின்தூக்கி (Lift) வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மூன்று நீச்சல் குளங்களிலும் தினமும் சுத்திகரிக்கப்பட்டு ஆக்ஸிஜன்

ஏற்றப்பட்ட பாலாற்றுத்தண்ணீர் நிரப்பப்படும். சர்வதேசத் தரத்தில் தென்னிந்தியாவில் உள்ள ஒரே நீச்சல் குளம் இதுதான் என்று நீச்சல் வீரர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஏழாவது தெற்காசிய விளையாட்டின் போது நீச்சல் போட்டிகள் டிசம்பர் 20 முதல் 24 முடிய நடக்கிறது. 53 வீரர்கள் நீச்சல் போட்டிகளில் கலந்து கொள் கிறார்கள். இந்திய வீரர்களான செபாஸ்டியன் சேவியர் மற்றும் அபிஜித் ஆகியோர் இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் நம்பிக்கை நட்சத்திரங்களா வார்கள்.



**தேக்கிய திறமைகளைக் காட்டியாடும்**
**ஆக்கி ஆட்டத்திற்கான அழகு அரங்கம்**

**ஹாக்கி விளையாட்டரங்கம்**

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் முதன்முறையாக ஹாக்கி விளையாட்டு, இடம் பெறுகின்றது. சர்வதேசத் தரத்தில் ஹாக்கி விளையாட்டரங்கம் சென்னையில் இல்லை. டெல்லி போன்ற பிற இடங்களுக்குச் சென்று ஹாக்கி விளையாட்டுப் போட்டியை நடத்தலாம் என்று தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடத்தும் குழுவினர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் சொன்னபோது, உடனடியாக சென்னைக்கு சர்வதேசத் தரத்தில் ஒரு விளையாட்டரங்கம் அமைக்கப்படவேண்டும் எனத் திட்டமிட்டு அதனைச் செயல் படுத்திக் காட்டியுள்ளார் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்.

எழும்பூரிலுள்ள மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கில் சர்வதேசத் தரத்தில் புதிய ஹாக்கி விளையாட்டரங்கம் 8.8 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் 5500 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கக்கூடிய வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கத்தை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தொழில் நுட்ப அறிஞர்களின் நேரடிப் பார்வையில் தமிழ்நாட்டுக் கட்டடக் கலைஞர்கள் சர்வதேசத் தரத்தில் கட்டி முடித்துள்ளார்கள்.

இவ்வரங்கில் அஸ்ட்ரோ டர்ப் என்று அழைக்கப்படும் செயற்கைப் புல்தரை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக தரைக்குள் இருக்கும் நீரை உறிஞ்சி, கருங்கல் சல்லி பரப்பி, அல்லும் பகலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு கட்டி முடித்துள்ளார்கள்.

இவ்விளையாட்டரங்கில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும்

அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக் கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி,ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

**உள்ளுறை விளையாட்டரங்கம்**

சென்னை பழைய மிருகக் காட்சி சாலை அமைந் துள்ள இடத்தில் சர்வ தேசத்தரத்தில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10000 பேர் கண்டுகளிக்கக் கூடிய உள்ளுறை விளையாட்டு அரங்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முழுக்க குளிர்சாதன வசதி கொண்ட இவ் வரங்கத்தின் தரைத்தளம் வழவழப்பாக்கப்பட்டதேக்கு மரத்தாலானது. இத்தளம் 59 மீ.நீளமும், 37 மீ. அகலமும் கொண்டுள்ளது. இரவைப் பகலாக்கும் ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ் வரங்கில் சர்வதேச உள்ளுறை விளையாட்டுகள் நடத்துவதற் கான அனைத்து வசதிகளும் ஒருங்கே அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரங்கில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக்கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி,ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

**வீராபுரம், அலமாதி துப்பாக்கிச் சுடும் தளங்கள்**

ஆவடியை அடுத்த வீரா




புரத்தில் ரூ.1.5 கோடி மதிப் பீட்டில் துப்பாக்கி சுடும் போட்டிக்கான தளம் அமைக்கப் பட்டுள்ளது. மத்திய ஆயுதப் படையினரின் தொழில்நுட்ப உதவியோடு சர்வதேசத் தரத்தில் இந்தத் தளம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள துப்பாக்கிச் சுடும் போட்டிக்கான தளங் களில் இரண்டாவது இடத்தைப் பெறுவதாக விளையாட்டு ஆர்வலர்களால் கருதப்படுகிறது.

**புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்தாட்ட - உள்ளுறை விளையாட்டரங்கம்**

கீழ்ப்பாக்கத்தில் புது ஆவடிச் சாலைக்கருகில் ஒரு ஏக்கர் பரப்பளவில் சர்வதேசத் தரத்தில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப் பந்தாட்ட உள்ளுறை விளை யாட்டரங்கம் அமைக்கப் பட்டுள்ளது. இவ்விளையாட்ட ரங்கம் 26.11.93 அன்று திறந்து வைக்கப்பட்டது.

5000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய வசதியும், 10000 சதுர அடி பரப்பில் சர்வ தேசத் தரத்தில் வழவழப்பாக்கப் பட்ட உயர்ரகத் தேக்குமரத்தாலான ஆடுகளமும் உள்ளன.

ஏற்றவும், இறக்கவும் முன்னரும், பின்னரும் நகர்த் தக்கூடிய வசதி கொண்ட கூடைப்பந்தாட்டப் போர்டு, 100 விளையாட்டு வீரர்கள் தங்கும் அளவுக்குப் படுக்கை வசதி கொண்ட கூடங்கள் உள்ளன. அரங்கில் பயிற்சிப் பெறுவதற் காக பக்கவாட்டில் இரண்டு சிமெண்ட்டாலான ஆடு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரவில் விளையாட்டுகள் நடத்துவதற்கு வசதியான ஒளி வசதி செய்யப்பட்டுள்ளது. இவ் விளையாட்டரங்கத்தில் ஏழாவது விளையாட்டு தெற்காசிய போட்டியின்போது கூடைப்பந்து டிசம்பர் 19 முதல் 21 முடிய

நடைபெறவுள்ளது. அதேபோல், கைப்பந்து போட்டி டிசம்பர் 22 முதல் 26 முடிய நடைபெற உள்ளது.




**துப்பாக்கி சுடுகின்ற வீரர்களை உருவாக்கும் வீராபுரம் துப்பாக்கி சுடுகின்ற தளம்**

**நேரு பூங்கா விளையாட்டரங்கம்**

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குப்பின்னால் நேரு பூங்கா விளையாட்டரங்கம் அமைந்துள்ளது. இங்கு தற்காலிகமாக, கிட்டத்தட்ட 8000 பார்வையாளர்கள் பார்க்கும் அளவிற்குக் கேலரி வசதியும், உடனுக்குடன் போட்டியின் முடிவுகளை தெரியப்படுத்தும் ஒமேகா மின்னணு அறிவிப்புப் பலகையும் சர்வதேசத் தரத்திலான கபடிப் போட்டிக்கான ஆடுகளமும் உள்ளன. இரவு நேரத்தில் ஆட்டங்களைக் கண்டு களிக்கும் வண்ணம் சிறப்பான ஒளி வசதி செய்யப்பட்டுள்ளது. இவ் விளையாட்டரங்கில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி – கபடிப் போட்டிகள், டிசம்பர் 19 முதல் 22 முடிய நடைபெறவுள்ளது. இதுதவிர, காட்சி விளையாட்டுகளான கோகோ டிசம்பர் 23 முதல் 24 முடியவும், சிலம்பம் போட்டிகள் டிசம்பர் 25 முதல் 26 முடியவும், நடைபெறுவுள்ளன.

இதுதவிர, ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் சிறப்பாக நடைபெற கலைவாணர் அரங்கம், சாந்தோம் மேனிலைப்பள்ளி, ஐஐடிவளாகம், போன்ற அரங்கங்களும் பயன்படுத்தப்படுகின்றன. கலைவாணர் அரங்கத்தில் பளுதூக்கும் போட்டிகள் டிசம்பர் 22 முதல் 26 முடியவும், சாந்தோம் மேனிலை வளாகத்தில் டேபிள் டென்னிஸ் மற்றும் குத்துச் சண்டை போட்டிகளும், ஜூடோ மற்றும் மற்போர் போட்டிகள் ஐ.ஐ.டி.வளாகத்திலும் நடைபெற உள்ளன.

**வண்டுகள் போல் பறந்தாடும் ஆட்டமல்ல குண்டுகளைப் பாயவிட்டு வெல்லுகிற ஆட்டம்**



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை பொது மக்கள் கண்டுகளிக்க எல்லா அரங்குகளிலும் இலவச அனுமதி தந்துள்ளார். சர்வதேசத் தரத்தில் நடத்தப்படும் இப்போட்டிகளால் சென்னைக்குப் பல சர்வதேசத் தர விளையாட்டு அரங்கங்கள் கிடைப்பதோடு, சென்னை நகர் மக்களுக்கும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைக் காணுகின்ற வசதியையும் தமிழக விளையாட்டுத்துறையின் விடிவெள்ளியாக திகழும் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அளித்துள்ளார்கள்.

**– மா. அசோகன்**



# துரித ரயில் திட்டம் ஒரு சரித்திரச் சிறப்பு வைபவம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 16.11.1995 அன்று துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தை (MRTS) துவக்கி வைத்து ஆற்றிய சிறப்புரை

**தொ**ன்மையான வரலாற்றையும், பல்வேறு சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்ட சென்னை மாநகரின் எழிலுக்கு, மேலும் எழில் சேர்க்க 'எழில்மிகு சென்னை 2000' என்கின்ற சீரிய திட்டத்தை 1,250 கோடி ரூபாய் செலவில் எங்கள் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்ற இந்த வேளையில், சென்னை மாநகரின் சிறப்பிற்கு அணி சேர்க்கும் வகையில், இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தினை, இன்று தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்த போது, 7 இலட்சம் மக்கள் மட்டுமே, வசித்த இந்த நகரம், அரை நூற்றாண்டுக்கால கட்டத்தில், 50 இலட்சம் மக்கள் வசிக்கும், ஒரு மாபெரும் மாநகரமாக விரிவடைந்துள்ளது. பெருகி வரும் மக்கள் தொகை, போக்குவரத்துத் தேவை சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு, சுகாதாரமான வாழ்க்கை போன்ற பிரச்சினைகள் தலை தூக்கத் தொடங்கியதால், தான்,

அவற்றைச் சமாளிக்க சென்னை நகருக்கு மேலும் அழகு சேர்க்க, "எழில்மிகு சென்னை 2000" என்ற திட்டத்தை எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது. கடந்த நான்காண்டுகளாகச் சென்னை நகரம், ஒரு புதியப் பொலிவைப் பெற்று வருவதை ஈடு செய்யும் வண்ணம், சென்னைக் கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து லஸ் முனை வரையில், 8.55 கிலோ மீட்டர் தூரத்திற்குத் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் முதல் கட்டம், இன்று துவக்கி வைக்கப்பட்டிருப்பது ஏற்புடைய தொன்றாகும்.

*1983-84*-ஆம் ஆண்டில், மத்திய திட்டக் குழுவின் அங்கீகாரமும், ரயில்வே வாரியத்தின் ஒப்புதலும் எப்போது இத்திட்டத்திற்குக் கிடைத்ததோ, அன்றிலிருந்து தமிழக அரசு, இத்திட்டச் செயலாக்கத்தின் ஒருங்கிணைப் பிற்கு எல்லா உதவிகளையும் ஆர்வத்துடன் வழங்கி வந் துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

இத்திட்டத்தைச் செயல் படுத்தத் தேவையான நிலத்தை, இலவசமாக வழங்க மாநில அரசு துவக்கத்திலேயே தனது ஒப்புதலை அளித்திருந்தது. அதன்படி முதல் கட்டப் பணிக்கு அரசு நிலமும், தனியார் நிலமும் சேர்த்து 20.22 எக்டேர் நிலம், தேவைப்படுவதாகக் கணக்கெடுக்கப்பட்டது. கிட்டத் தட்ட 50 கோடி ரூபாய் மதிப் புள்ள இந்த நிலப்பரப்பில் இதுவரை 19.68 எக்டேர் நிலம் முழுமையாக இத்திட்டத்திற்கு என வழங்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று 4.68 கிலோ மீட்டர் நீளத்திற்கு, சேப்பாக்கம் ரயில் நிலையம் வரை துரித ரயில் போக்குவரத்து துவக்கி வைக்கப்படும் நிகழ்ச்சி நிச்சயமாக ஒரு சரித்திரச் சிறப்பு மிக்க வைபவம் என்பதில் சந்தேகம் இல்லை.

பல்முனை விரிவாக்கத் தினால் சென்னை போன்ற பெருநகரங்களில், நகர்ப்புற நிலங்களின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் இது போன்ற திட்டங்களைச் செயல்படுத்த, நிலம் கிடைப்பது அரிதாகி வருகின்றது. எனவே தான் இந்தத் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான அரசு நிலத்தை அளித்ததோடு, தனியார் நிலத்திற்கும் நஷ்டஈடு வழங்கி கையகப்படுத்தி இலவசமாகத் தமிழக அரசு அளித்துள்ளது.

அரசு நிலங்களில் குடியிருந்த மக்களுக்கு மாற்றுக் குடியிருப்பு களுக்கு ஏற்பாடு செய்யும் சமுதாயப் பிரச்சினைகள் நிறைந்த மாபெரும் பொறுப் பையும் தமிழக அரசு மன முவந்து ஏற்றுக்கொண்டதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டுள்ளேன்.

Madras Metropolitan Development Authority - அதாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்புப் பணிகளை இதுவரை மேற்கொண்டு வந்துள்ளது. துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் ரயில்வே நிலையங்களை வடிவமைப்பதற்குக் கட்டடக் கலை நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவையையும் இந்தக் குழுமம் ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்கியதையும் நினைவுகூர விரும்புகிறேன்.

ஆகவே, என்னால் தான் இந்தத் திட்டம் நிறைவேறியது என்று ஒருவர் கூறுவது ஏற்புடையது அல்ல. ஒரு வருடைய சொந்த முயற்சி யினால் இந்தத்திட்டம் நிறை வேறவில்லை. அப்படி உரிமை கொண்டாடுவது சற்றும் ஏற்புடையதாகாது. தமிழக அரசு வழங்கிய ஒத்துழைப்பினால் தான் இந்தத் திட்டம் இன்று நிறைவேறியுள்ளது என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக் கிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி இந்தத் திட்டத்திற்குத் தேவை என்று கணக்கிடப்பட்ட 20.22 எக்டேர் அரசு நிலத்தில் 509 கோடி ரூபாய் மதிப்புள்ள 19.68 எக்டேர் நிலம் ரயில்வே துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மீதமிருப்பது 0.54 எக்டேர் நிலம் தான். 0.54 எக்டேர் என்பது மிகச் சிறிய அளவிலான நிலப்பரப்பு. அதற்குத் தேவையான நிதியும்

---

**● முதல் அட்டை**

**சொல்லும்**

**செய்தி:**

வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, நிலத்தினால் இந்தத் திட்டத்திற்கு எந்த விதத்திலும் காலத் தாமதம் ஏற்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். At no point of time the progress of project was affected for not handing over the land in time.

மேலும், இந்த விழாவிற்கு வரலாமா, வேண்டாமா, வந்திருக்க வேண்டுமா என்று சிலர் நினைக்கிறார்கள். சிலர் இந்த விழாவிற்கு வரவேண்டாம் என்று முடிவு செய்து விட்டார்கள். ஆனால், யார் வந்தாலும், வராவிட்டாலும் இத்திட்டம் நின்று விடப் போவதில்லை. இந்தத் திட்டம் மக்களுக்காக, பொதுமக்களின் உபயோகத்திற்கு உருவாக்கப் பட்ட ஒரு மாபெரும் திட்டம். இம்மாபெரும் திட்டம் நிறைவேற்றப்பட்டுத் துவக்கி வைக்கப்படும்போது, அதில் மக்கள் மீது உண்மையான அக்கறைக் கொண்டவர்கள் நிச்சயமாகக் கலந்து கொள்ள வேண்டும். இத்தகைய விழாக் களில் கலந்து கொள்வதில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் பாராட்டுவது என்பது தேசிய உணர்வு அற்றவர்களுக்குத் தான் பொருந்தும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது தேசிய உணர்வு இருந்தால், உண்மையான தேசிய வாதியாக இருந்தால், மிகப் பெரிய செலவில் ஒரு மகத்தானத் திட்டம் அதிலும் இந்தியாவிற்கே முன்னோடி யான ஒரு திட்டம் முதல் முறையாக இந்தியாவில் நிறை வேற்றப்படும்போது அவசியம் இதில் பொது நன்மையில் அக்கறை உள்ளவர்கள் கலந்து கொள்ளவேண்டும் அப்படி கலந்து கொள்ளவில்லை என்றால் உண்மையான அக்கறை மக்கள் மீது இல்லை என்று தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**"ஆகவே, நிலத்தினால் இந்தத் திட்டத்திற்கு எந்த விதத்திலும் காலத் தாமதம் ஏற்படவில்லை"**

**- புரட்சித்தலைவி**

இந்தத் துரித ரயில் போக்கு வரத்தை உபயோகப்படுத்தும் மக்கள், இந்த ரயில் நிலையங் களிலிருந்து, பேருந்துகளுக்கு மாறி மாநகருக்குள் செல்வ தற்குத் தேவையான போக்குவ ரத்து வசதியையும், எங்கள் அரசு ஒரு ஒருங்கிணைப்புப் பணி யாகத் திட்டமிட்டு தனது செலவில் நிறைவேற்றி வரு கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமின்றி, இந்த ரயில்வே நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளின் சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத் திட்டங்களையும் எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரப் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யும் இந்தத் திட்டத்தை இன்று எனதருமைத் தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத் தின் பயன்கள் சென்னை மாநகர மக்களுக்கு முழுமை யாகச் சென்றடைய வேண்டும் என்றால் இத்திட்டத்தை லஸ் முனையிலிருந்து தரமணி வரை மேலும் 8.5 கிலோமீட்டர் நீளத்திற்கும் விரிவாக்கம் செய்தாக வேண்டும். எனவே இந்த விரிவாக்கத்தை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசையும் ரயில்வே நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்கிறேன்.

உலகிலேயே மிகப் பெரிய ரயில்வே நிறுவனமான இந்திய ரயில்வே துறைக்குப் பொறு பேற்றுச் சீரிய முறையில் செயலாற்றி வரும் மாண்புமிகு மத்திய ரயில்வே இணை அமைச்சர் திரு சுரேஷ் கல்மாடி அவர்கள் தமிழக மக்கள் சார்பாக நான் முன் வைத்தக் கோரிக்கையை ஏற்று இத்திட்டத்தின் அடுத்தடுத்தக் கட்டங்களை மிக விரைவில் செயல்படுத்துவார் என்று நம்புகிறேன்.

As Mr. Suresh Kalmadi himself and during his address we are colleagues in the Rajya Sabha together and I am indeed very happy that Mr. Suresh Kalmadi has assumed charge as Minister of State for Railways, I congratulate him, felicitate him and wish him a very successful career and I express the hope that he will accede the requests I made on behalf of the people of Tamil Nadu.

அவ்வாறு, இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட விரி வாக்கம் மேற்கொள்ளப்பட்டு வில்லிவாக்கம் வரை இத்

# ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரிக்கு முதல்வர் பாராட்டு

சென்னை YMCA உடற்பயிற்சிக் கல்லூரியானது 75 ஆண்டுகள் தனது உயரிய சேவையைத் தமிழகத்திற்கு மட்டுமன்றி, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் அளித்து நமது நாட்டின் முதல்தர உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருவதையொட்டி YMCA கல்லூரியின் முதல்வர் டாக்டர் ராஜசீலி ஜான், கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் அடங்கிய குழு ஒன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்த இந்தக் குழுவானது. தங்களது சென்னை உடற்பயிற்சிக் கல்லூரியானது கடந்த 75 ஆண்டுக் காலமாகத், தமிழகத்தை விளையாட்டுத் துறையில் முன்னணிக்குக் கொண்டு வரச் செய்திருப்பதோடு, தமிழக இளைய தலைமுறையினர் விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தைப் பரவிடச் செய்து, அரிய சேவை ஆற்றி உள்ளதை YMCA உடற்பயிற்சி கல்லூரியின் முதல் பெண் முதல்வர் டாக்டர் ராஜசீலி ஜான், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

YMCA-ன் வரலாற்றினை கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்திற்கு YMCA ஆற்றியுள்ள 75 ஆண்டுக்காலச் சேவையினைப் பாராட்டி, தனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், ஆசிகளையும் YMCA முதல்வர், பேராசிரியைகள், மாணவ, மாணவியர் ஆகிய அனைவருக்கும் தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது, YMCA முதல்வர் கல்லூரி வளர்ச்சிக்காகச் சில கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்பு வைத்தார். கோரிக்கைகள் அனைத்தையும் தமிழக அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் YMCA கல்லூரிக் குழுவினருக்குத் தெரிவித்தார்.

---

திட்டத்தை விரிவுபடுத்தத் தேவையான நிலத்தைத் தமிழக அரசு இலவசமாக வழங்கும் என்பதையும் அதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை தமிழக அரசு முனைப்புடன் மேற்கொள்ளும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமின்றி, இந்த விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டு Rail India Technical and Economic Services அதாவது, RITES என்ற நிறுவனத்தின் மூலம் பூர்வாங்க ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு துரித ரயில் பாதைக்கான நிலத்தை அடையாளம் கண்டு அவற்றை இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து சென்னைப் பெருநகரத்தின் Master Planகள் தயார் செய்யப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். இத்திட்டத்திற்குத் தேவையான அரசு நிலம் மட்டுமின்றி, தனியார் நிலத்தையும் கையகப் படுத்தி ரயில்வே துறைக்கு வழங்க எங்கள் அரசு தயாராக உள்ளது. இத்திட்டப் பணிகளில் அரசு நிலங்களில் வாழும் மக்களுக்கு மாற்றிடம் வழங்கிடவும் இடப் பெயர்ச்சியால் எழும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் திட்டம் தயாராக உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன் முதலாக மாநகரங்களில் உயர்வான பகுதிகளில் செல்லும்படி அமைக்கப்பட்ட இந்தத் துரித ரயில் திட்டம் சென்னையின் எழிலுக்கு மேலும் எழிலைச் சேர்க்கும் என்பதிலும்,

சென்னை மாநகரத்தின், மிக முக்கிய Land Mark-களில் ஒன்றாகத் திகழும் என்பதிலும், ஐயமில்லை. இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தங்களது உழைப்பை நல்கிய தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், பொறியாளர்களுக்கும், நிர்வாகி களுக்கும், தொழிலாளப் பெரு மக்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

உயர்வான பகுதிகளில், ரயில் நிலையங்கள் அமைக்கப்படும் போது அப்பகுதியின் கீழ்ப் பகுதிகள் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் உண்டு. எனவே, இந்தப் பகுதிகளின் சுற்றுப்புறச் சூழல் கெடாமல் ஒரு அழகுணர்வுடன் பாதுகாத்துப் பராமரிக்கும் திட்டத்தை (Madras Metropolitan Development Authority) அதாவது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் வகுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

I wish to point out to the Hon'ble Minister of State for Railways that the Tamil Nadu Government has taken all the necessary steps to clear the remaining land that is necessary for the completion of this project for the final expansion. And the Hon'ble Minister of State for Railways has expressed concern about the encroachments in the lower areas of this project. We have drawn up a Master Plan for clearing the encroachments also and orders have been issued.

போக்குவரத்துத் துறையில் ஒரு விழிப்புணர்ச்சி பெற்ற மாநிலம் தமிழகம் என்பதையும் மற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் உள்ள பேருந்து களும் சாலை வசதிகளும் சிறப்பாக அமைந்துள்ளதையும் எவரும் மறுக்க முடியாது. 1991-ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் 2,296 பேருந்து களும், மாநிலத்தின் இதரப் பகுதிகளில் 11,190 பேருந்துகளும் இயங்கிக் கொண்டு இருந்தன. ஆனால், இன்றைய அளவில், சென்னை மாநகரத்தில் மட்டும் 2,580 பேருந்துகளும், மாநிலத்தின் இதரப் பகுதிகளில் 13,278 பேருந்துகளும் ஆக மொத்தம் 15,858 பேருந்துகள் இயங்கி வருகின்றன. போக்குவ ரத்து மேம்பாட்டில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள ஈடுபாட்டை, இந்தப் புள்ளி விவரங்கள் விளக்கும் என்று நம்புகிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொருத்தவரையில் டீசல் விலை உயர்வு பொருட்களின் விலை உயர்வு ஊழியர்களின் சம்பள உயர்வு லாபம் ஈட்டாத பகுதி களில் பேருந்துகள் இயக்கம் என்று பல்வேறு பிரச்சினை களை எதிர்கொள்ள வேண்டி இருந்தபோதிலும் பேருந்துகளை ஏழை எளிய மக்கள் மிக அதிகமாக உபயோகப்படுத்து வதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் பாதிக்கப்படாத வகையில் கட்டண உயர்வை தவிர்த்து வருகின்றோம். எனவே, இந்தத் துரித ரயில் போக்குவ ரத்தினை ஏழை எளிய மக்கள் கூடுதலாகப் பயன்படுத்தும் சூழ்நிலைகள் இருப்பதைக் கருத்தில் கொண்டு குறைந்த கட்டணத்தில் இயக்க வேண்டும் என்று தென்னிந்திய ரயில்வே நிர்வாகத்தைக் கேட்டுக் கொள் கிறேன். பொதுவாகவே ரயில் கட்டண உயர்வைத் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசையும் ரயில்வே நிர்வாகத் தையும் கேட்டுக் கொள்கிறேன்.

I would like to point out to the Hon'ble Minister of State for Railways that though we have faced many constraints in the operation of our Public transport system due to frequent hike in the price rise of diesel, rise in salaries and several other factors we have not raised the rates of bus fare, so that the common man can make full use of the transport system. In the same way, I would like to point out that this Mass Rapid Transist System will be used by the common man. Therefore, I request the Railway Minister to keep the rates low. And generally I would like to make a general request to the Railway Minister to see that all passenger train fares may be reduced.

சென்னை மாநகர் வாழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இந்தத் துரித ரயில் போக்குவரத்து சீரிய முறையில் செயலாற்றும் என்ற எனது நம்பிக்கையை வெளிப்படுத்தி விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.



## சென்னை நகர மக்களின் கனவு நனவாகியது!

# பறக்கும் ரயிலைத் தொடங்கி வைத்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கடந்த **16.11.95** அன்று, இந்தியாவிலேயே முதன் முறையாக அமைக்கப்பட்ட பறக்கும் இரயில் போக்கு வரத்தை, சென்னை மக்களுக் காகத் தொடங்கி வைத்தார்.

இதற்கான விழா சென்னை, சிந்தாதிரிப்பேட்டை இரயில் நிலைய வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரும் பாதை யெங்கிலும் வண்ண, வண்ணத் தோரணங்கள் காற்றில் அசைந்தபடி வரவேற்றன. மங்கள இசை காற்றில் கலந்து ஒலித்தன. ஏராளமான பெண்கள் இந்த விழாவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு முதல்வர் அவர் களின் வருகை தெரிந்தவுடன் அனைவரும் எழுந்துநின்று, கைதட்டி, வாழ்த்துக் குரலெழுப்பி வரவேற்றார்கள்.

**வரவேற்பு**

மேடையில், மாண்புமிகு முதல்வர் அவர்களை,




மாண்புமிகு மத்திய இரயில்வேத் துறை இணையமைச்சர் திரு.சுரேஷ்கல்மாடி, மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.வி.தங்கபாலு, தென்னக ரயில்வே பொது மேலாளர் திரு.வி.கே. அக்னி ஹோத்ரி ஆகியோர் வர வேற்றார்கள்.

பின்னர், மேடையிலிருந்த மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கும், மற்றவர்களுக்கும் புகழ்பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மலர்செண்டு அளித்து வரவேற்றார்கள். அர்ச்சுனா விருதுபெற்ற திருமதி ரோசாகுட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மலர்ச் செண்டு வழங்கினார்.

மேடையின் முன்னால் வலப் புறமாக இந்நிகழ்ச்சிக்காகவே அமைக்கப்பட்டிருந்த விளக்குக் கம்பத்தில் சிவப்பு விளக்கு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

**பறக்கும் ரயிலால் பிறக்கும் சிறப்பு!**

இந்திய ரயில்வே இந்திய அளவில் இரண்டு சிறப்புக் களைப் பெற்றுள்ளது. ஒன்று கல்கத்தா நகரில் ஓடும் பாதாள இரயில் போக்குவரத்து, இன்னொன்று சென்னையில் இந்தியாவிலேயே முதன்முதலாக ஓடும் பறக்கும் இரயில். கடந்த பத்தாண்டுகளாக, என்று நடைபெறும்?-இந்த வரலாற்று நிகழ்ச்சியென்று, நாட்களை எ ண் ணி க் கொ ண் டி ரு ந் த சென்னைப் பொதுமக்களுக்கு இந்நிகழ்ச்சி சொல்லொண்ணா மகிழ்ச்சியைக் கொடுத்திருக் கிறது. அந்த வகையில் இந்தப் பறக்கும் ரயில் சென்னைக்கு மற்றுமொரு புகழையும் சுமந்து ஓடுகிறது.

சரியாக 12 மணியளவில் வரலாற்றுச் சிறப்புப்பெற்ற இந்த நிகழ்ச்சி குறித்த கல்வெட்டை மேடையிலிருந்தபடியே ஒரு பொத்தானை அழுத்தி, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

பறக்கும் இரயில் ஓட்டுநர் மற்றும் அலுவலர்கள் மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்கள். தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு.இரா.அன்பரசு மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை இணை அமைச்சர் திரு.கே.வி.தங்கபாலு அவர்கள், மாண்புமிகு மத்திய இரயில்வேத்துறை இணை அமைச்சர் திரு.சுரேஷ் கல்மாடி அவர்கள் ஆகியோர் பேசினார் கள். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தென்னக ரயில்வே பொது மேலாளர் திரு.வி.கே. அக்னி ஹோத்திரி வரவேற்புரையாற்றி னார்.

**தமிழக அரசுக்கு நன்றி**

மாண்புமிகு மத்திய இரயில்வே இணையமைச்சர் இந்த விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டமைக்காகத் தனது நன்றியைத் தெரிவித்தார். மேலும், இந்தப் பறக்கும் இரயில் திட்டத்திற்குத் தேவையான நிலத்தை வழங்கியுள்ள தமிழக முதல்வருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார். இந்தத் திட்டத்திற்கு வேண்டிய அனைத்து நிலத்தையும் தமிழக அரசு வழங்கிவிட்டது., மிகமிகக் குறைந்த நிலமே பாக்கியுள்ளது, அதுவும் உடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக முதல்வர் தன்னிடம் கூறியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நிலப் பிரச்சினை யாலோ அல்லது பணத்தட்டுப் பாட்டாலோ லஸ் வரை போடப்பட்டுள்ள இத்திட்டம் தடைபடாது. இத்திட்டம் இரண்டு மாதங்களுக்குள் முடிந்து விடும் என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க, இத்திட்டத்தை, தரமணி வரை நீட்டிக்கும் முயற்சி பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் திரு.சுரேஷ் கல்மாடி அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். உரை யினைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேடை

யிலிருந்தபடியே ஒரு விசையை அழுத்தினார். சட்டென மேடையின் முன்னாலிருந்து கம்பத்தில் எரிந்த சிவப்பு விளக்கு மாறி பச்சை விளக்கு பளிச்சிட்டது.

பொதுமக்கள் கைதட்டி, வாழ்த்தொலி எழுப்பினர். "பச்சைவிளக்கு எரியத்தொடங்கி விட்டது. பறக்கும் இரயில் தயார் நிலையில் உள்ளேன்" என்று ஒலியெழுப்பியது. உடன் மாண்புமிகு மத்திய இரயில்வேத் துறை இணையமைச்சர் பச்சைக் கொடி காட்டினார்.

மணப்பெண்ணைப்போல் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பறக்கும் இரயில், பூக்கள் குலுங்க புறப்பட்டது. உள்ளே ஏராளமான பொதுமக்கள் அந்த இரயிலின் முதல் பயணத்தை முழுதாய் அனுபவிக்க அமர்ந்திருந்தார்கள்.

பறக்கும் இரயில் தற்போது சென்னைக் கடற்கரையிலிருந்து, சேப்பாக்கம் வரை செல்கிறது. விரைவில் லஸ்வரை செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் பொதுமக்களின் தேவையைக் கருதி, தரமணி வரை செல்ல வேண்டும் என்று மத்திய இரயில்வே இணை அமைச்சரைக் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு புரட்சித் தலைவியின் எண்ணம் நிறைவேறும் நன்னாளே சென்னை மக்களுக்குப் பொன் நாளாகும்!

### ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

## கலைநிகழ்ச்சிகள்



கோயம்பேட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுக் கிராமத்தில் தங்கியிருக்கும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு பொழுது போக்கு அம்சமாக தினந்தோறும் மாலை வேளையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. கலை நிகழ்ச்சிகளில். தனஞ்செயனின் நாட்டிய நாடகம், திருமதி ஸ்ரீநிதி ரங்கராஜன் அவர்களின் பரத நாட்டியம், மற்றும் அபசுரம் ராம்ஜி அவர்களின் இசைக் கச்சேரி முதலானவை நடைபெறவுள்ளன.





## அதி நவீனத் தொழில்நுட்பங்களால் சர்வதேசத் தரத்தை எட்டுகின்ற அதே வேளையில்

# தமிழ்த் திரைப்பட உலகம் சமுதாய நன்மைக்கே பாடுபடுகிறது எனும் பாராட்டைத் தொடர்ந்து பெற்றிடுவோம்

**1993-ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**

*1993*-ஆம் ஆண்டிற்கான மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும், வண்ணமிகு விழாவில் கலந்துகொண்டு, பெருந் திரளாகக் குழுமி இருக்கும் உங்கள் அனை வரையும் ஒருங்கே காண்பதில் நான் பெருமகிழ்சியும் பேரு வகையும் அடைகின்றேன்.

கலைத் துறையின் மாபெரும் அங்கமான திரைப்படத்துறை, குறிப்பாகத் தென்னிந்தியத் திரைப்படத் துறை தனக்கே உரித்தான பாரம்பரியமிக்க பெயரையும் புகழையும் கொண்ட ஒரு மாபெரும் துறை யாகும். கலைகளையும், கலை களின் பல்வேறு அழகிய வெளிப்பாடுகளையும் தங்கள் வாழ்க்கையின் அங்கமாக்கி, மகிழ்ச்சியானதொரு வாழ்க் கையை வாழும், மன வளம் படைத்த மக்கள், தமிழக மக்கள். கலைகளை ரசித்து மகிழும் மனப் பக்குவமும், கலை வடிவ ங்களுக்கும் கலை வித்த கர்களுக்கும் ஆதரவளித்து, மகிழ்ச்சி அடையும் மனப் பாங்கும், தமிழ்நாட்டிற்கே உரித்தான பாரம்பரியமிக்க குணமாகும். இயல்பாகவே எதையும் கலைக் கண்ணோட்டத் துடன் கண்டு மகிழும் தன்மை படைத்த தமிழக மக்களிடையே திரைப்படத் துறையின் ஆதிக்கம்

அதிகரித்து வருவது, எந்த வகையிலும் ஆச்சரியமில்லை!

தமிழக மக்களின் உள் உணர்வுகளை நன்முறையில் புரிந்து, அவற்றைப் பிரதி பலிக்கின்ற வகையில் நடை பெற்ற வருகின்ற உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் திரைப்படத்துறை உட்பட கலைத் துறையில் எல்லாப் பிரிவுகளும், சீரான வளர்ச்சியை அடைந்து, சிறப்பெய்தி வருகின்றன. கலைத் துறையின் முன்னேற்றத்தை அரசே முன்னின்று கண் காணித்து வருகின்ற, நல்லதொரு சூழ்நிலையில் கலை வித்த கர்களின் கலைத்திறமையைப் பாராட்டி, அவர்களது தனித்தன்மையை அங்கீகரித்து வழங்கப்படும் இந்த விருதுகள், மேலும் பல புதிய சாதனை களைப் படைக்க கலைத் துறையினருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, 6 கோடி தமிழக மக்களின், ஏகோபித்த பாராட்டுக்களையும், வாழ்த்துக் களையும், தன்னகத்தே பெற்றுள்ள இந்த விருதுகளைக் கலையுலக நட்சத்திரங்களுக்கும், கலை வித்தகர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழக மக்களின் சார்பில் வழங்குவதில் நான் ஆனந்தம் அடைகின்றேன்.

இன்று விருதுகளைப் பெறுகின்ற கலை வித்தகர்களும், தொழில்நுட்பக் கலைஞர்களும், தாங்கள் மேற்கொண்டுள்ள கலைத்துறையில், புதிய பரிமாணங்களைக் கண்டு மென்மேலும் பெயரும் புகழும் பெற்று நீண்ட ஆயுளுடன் கலைச் சேவை புரிய வேண்டும் என்று நிறைந்த மனதுடன் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அசுர வேகத்தில் வளர்ந்து வரும் தொழில்நுட்பமும், அறிவியலும், இன்று திரைப்பட உலகத்தின் மீது ஏற்படுத்தி உள்ள தவிர்க்க முடியாத தாக்கத்தையும் அதே நேரத்தில் திரைப்பட உலகம், புதிய கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி, அவர்களின் மனங் களிலும், உணர்வுகளிலும் உண்டாக்கி வரும் தாக்கத்தையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஒரு புறம் மக்கள் மத்தியிலே கலை உணர்வையும், விஞ்ஞான உணர்வையும், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக் களையும் வழங்கி, புதிய சிந்தனைகள் தோன்ற வழி வகுத்து வரும் அதே திரைப் படங்கள், சில நேரங்களில் மக்கள் மனதிலே வன்முறை உணர்வையும், மத இன வேறுபாட்டுப் பகை உணர் வையும், தங்களை அறியாமலேயே தூண்டி விடுகின்ற ஒரு போக்கையும் சமீப காலமாகத் திரைப்படங்களில் காண முடிகிறது.

அதி நவீனத் தொழில் நுட்பத்தைக் கையாள்வதன் மூலம், நமது திரைப்படங்கள், சர்வதேசத் தரத்தை அடைய வேண்டும் என்கின்ற ஒரு நியாயமான உந்துதல் நம்மிடம்





இருந்தாலும், தமிழகத் திரைப்படங்கள் மூலம், சமுதாய நன்மைகள் தான் அதிகமாகக் கிடைக்கின்ற என்ற ஒரு பாராட்டும் தொடர்ந்து நமக்குக் கிடைத்தாக வேண்டும் என்பதையும் நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பொழுதுபோக்குச் சாதனமாக மட்டும் இல்லாமல், தமிழகத்தின் உரிய கலாச்சாரம், குடும்பப் பாச உணர்வை, நியாய தர்ம நல் உணர்வு ஆகியவற்றிற்குக் குந்தகம் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கவும் நமது திரைப்படங்கள் பயன்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொழுது போக்குச் சாதனமாகவும், கலைகளை வளர்க்கும் சாதனமாகவும் விளங்கும் திரைப்படத்துறை ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்க்கையை அளிக்கும் ஒரு மாபெரும் தொழிலாகவும் இருந்து வருகின்றது.

எனவேதான், திரைப்படத் துறையினுடைய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் ஏற்பட்ட போதெல்லாம் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு, நான் ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் முயற்சிகளை மேற்கொண்டேன். அதே உணர்வுடன், திரைப்படத் துறையின் வளர்ச்சியை நிலைப் படுத்தப் பல்வேறு திட்டங் களையும் அறிவித்தேன்.

திரைப்படத் துறையில் பணியாற்றி வருகின்ற, பல்லாயிரக் கணக்கான தொழில்நுட்பக் கலைஞர்களும், தொழிலாளர்களும் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களின் மூலம், தங்களுக்கு என்று சொந்தமாக, வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காக சென்னைக்கு அருகில் 10 கோடி ரூபாய் மதிப்பில் 85 ஏக்கர் நிலம் தமிழக அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டது. திரைப்படத் தயாரிப்புகளுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஒரே இடத்தில் தயாரிப்பாளர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற எண்ணத்தில் எங்கள் ஆட்சிக் காலத்தில் 26 கோடி ரூபாய் செலவில், திரைப்பட நகர், Film City ஒன்று தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு இன்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, வேறு எந்த ஒரு இடத்திலும் இத்தனை நவீன வசதிகளுடன் ஒரு திரைப்பட நகரம் இல்லை என்று பலரும் பாராட்டி வருகின்றனர். குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்ப் படங்களுக்கு, மானியத் தொகை வழங்கும் திட்டத்தை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு விரிவுபடுத்தி இன்று அத்தகைய படங்களுக்குத் தலா 3 இலட்சம் ரூபாய் வீதம், 75 திரைப்படங்கள் வரை மானியத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

திரைப்பட்த் தயாரிப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, எல்லா இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த ஒரே



இடத்தில் அனுமதி வழங்கும். Single Window Clearance முறையும், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் தொடங்கப்பட்டு, சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. வளர்ந்து வரும் விண்கோள் தொலைக் காட்சிகளின் ஆதிக்கத்தினால், திரைப்படத்துறை நசிந்து விடாமல் இருப்பதற்காக, திரையரங்குக் கட்டணத்தை மாற்றி அமைத்துக் கொள்ள, ஒரு புதிய முறைக்குத் தமிழக அரசால் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல், திரைப்படத் தொழிலாளர் களுக்கும், ஆயுள் காப்புறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி, விபத்தில் மரணமடைய நேரும், தொழிலாளர்களின் குடும் பங்களுக்குத் தலா 50,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கும் திட்டமும், திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு நல நிதித் திட்டமும், செயல் படுத்தப்பட்டு வருகின்றன. திரைப்படத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக நலிந்த திரைப்படத் தொழிலாளர்கள் 1,000 பேருக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்றையும், இந்த ஆண்டு முதல் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்படுத்தி வருகிறது.

22.11.1995 அன்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைமாமணி விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்ட போது, வயது முதிர்ந்த நலிந்த நிலையில் உள்ள கலைமாமணி விருது பெற்ற கலை வித்த கர்களில் சிலர் தங்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவச மாகப் பயணம் செய்ய சிறப்புச் சலுகையை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டு, 45 வயதைக் கடந்த கலைமாமணி விருது பெற்ற நலிந்த கலைவித்தகர்கள் அனைவரும் தமிழக அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய ஆணை வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணை, மிக விரைவில் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொழுதுபோக்கு என்ற குறுகிய வட்டத்தை விட்டு திரைப்படங்கள் மக்களின் எண்ணங்களையும், மனங் களையும் பண்படுத்துகின்ற கலைப் பொக்கிஷங்களாகத் திகழ்ந்திட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு விருது பெற்ற அனைவருக்கும், மீண்டும் எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**கல்வியின் மேன்மை**

வாழ்வில் அணியாகவும், துணையாகவும் விளங்குவது நாம் கற்ற கல்வி மட்டுமே.

—அரிஸ்டாடில்

# "மாநில திரைப்பட விருது" வழங்கும் விழா

சிறந்த திரைப்படங்கள் நடிகர், நடிகை, மற்றும் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து தமிழக அரசு ஆண்டுதோறும் விருது வழங்கி வருகிறது.

1993-ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப் படங்கள் மற்றும் திரைப்படக் கலைஞர் களுக்கான விருது வழங்கும் விழா 24.11.1995 அன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது.

## நான்காம் அட்டை

## சொல்லும் செய்தி:

விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு சிறந்த திரைப்படங்கள் மற்றும் திரைப்படக் கலைஞர்களுக்கான விருதுகளை வழங்கினார்.

1993-ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படமாக "ஜாதி மல்லி" படம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தது. இதற்கான தங்கப் பதக்கத்தையும், ரூ. 1 1/4 இலட்சம் ரொக்கப் பரிசையும், பத்திரத்தையும் திரைப்பட இயக்குநர் திரு கே. பாலசந்தரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். 2வது பரிசுக்கு உரிய படமாக "பத்தினிப் பெண்" படம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தது. இதற்கான பதக்கத்தையும், ரூ.75 ஆயிரத்தையும் பட அதிபர் திரு கஸ்தூரி வாசு பெற்றுக் கொண்டார். 3வது பரிசுக்கான பதக்கம் ரூ.50 ஆயிரம் ரொக்கம் ஆகியவை "கோகுலம்" படத்துக்குக் கிடைத்தது. அதைப் பட அதிபர் திரு ஆர்.பி. சவுத்திரி பெற்றுக் கொண்டார்.

"மகாநதி" படத்துக்குச் சிறப்புப் பரிசு கிடைத்தது. இதற்கான பதக்கம், ரூ.50 ஆயிரம்



# 1993-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

**சிறந்த திரைப்படங்கள்**

| | | |
|---|---|---|
| 1. முதல் பரிசு | : | ஜாதி மல்லி |
| 2. இரண்டாம் பரிசு | : | பத்தினிப் பெண் |
| 3. மூன்றாம் பரிசு | : | கோகுலம் |
| 4. சிறப்புப் பரிசு | : | மகா நதி |

**கலைஞர்களுக்கான பரிசுகள்**

| | | |
|---|---|---|
| 1. சிறந்த நடிகர் | : | அர்ஜுன் (ஜென்டில்மேன்) |
| 2. சிறந்த நடிகை | : | மீனா (சேதுபதி ஐ.பி.எஸ்., எஜமான்) |
| 3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) | : | விஜயகுமார் (கிழக்கு சீமையிலே) |
| 4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) | : | ரூபிணி (பத்தினிப் பெண்) |
| 5. சிறந்த இயக்குநர் | : | ஷங்கர் (ஜென்டில்மேன்) |
| 6. சிறந்த கதையாசிரியர் | : | சுஜாதா உதயகுமார் (பொன்னுமணி, எஜமான்) |
| 7. சிறந்த உரையாடல் ஆசிரியர் | : | ஆர்.சி. சக்தி (பத்தினிப் பெண்) |
| 8. சிறந்த இசை அமைப்பாளர் | : | ஏ.ஆர். ரகுமான் (ஜென்டில்மேன்) |
| 9. சிறந்த பாடலாசிரியர் | : | புலமைப்பித்தன் (பத்தினிப் பெண்) |
| 10. சிறந்த பின்னணிப் பாடகர் | : | ஜெயச்சந்திரன் (கிழக்கு சீமையிலே, செவ்வந்தி) |



ரொக்கம் ஆகியவற்றைப் பட அதிபர் திரு எஸ்.ஏ. ராஜ்கண்ணுவிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

அதன் பிறகு சிறந்த நடிகர் நடிகைகளுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி நடந்தது.

இவர்கள் அனைவருக்கும் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் விருதும் வழங்கப்பட்டது.

11. சிறந்த பின்னணிப் பாடகி : சுஜாதா (புதிய முகம்)

12. சிறந்த ஒளிப்பதிவாளர் : எம்.சி. சேகர் (வால்ட்டர் வெற்றிவேல்)

13. சிறந்த ஒலிப்பதிவாளர் : சம்பத் (எஜமான், சேதுபதி ஐ.பி.எஸ்.)

14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) : சுரேஷ் அர்ஸ் (திருடா திருடா)

15. சிறந்த ஆர்ட் டைரக்டர் : சலம் (வால்ட்டர் வெற்றிவேல்)

16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : விக்ரம் தர்மா (மகா நதி)

17. சிறந்த நடன ஆசிரியர் : சுந்தரம் (ஜென்டில்மேன்)

18. சிறந்த ஒப்பனைக் கலைஞர் : என். பத்மநாபன் (சின்னஜமீன், பொன்னுமணி)

19. சிறந்த தையற் கலைஞர் : சி.கே. கண்ணன் (வீட்ல விசேஷங்க)

## 1993-ஆம் ஆண்டிற்கான கலை வித்தகர் விருதுகள்

அறிஞர் அண்ணா விருது : டாக்டர் ஏ. நாகேஸ்வர ராவ்

பாவேந்தர் பாரதிதாசன் விருது : பி. சுசிலா

கலைவாணர் விருது : வடிவேலு

ராஜா சாண்டோ விருது : பாபு (ஒளிப்பதிவாளர்)

எம்.ஜி.ஆர். விருது : பி. சரோஜாதேவி

ஜெயலலிதா விருது : கே. பாலாஜி

சிவாஜி கணேசன் விருது : சிவகுமார்

விழாவில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன், திரைப்படத் தேர்வுக்குழுத் தலைவர் நீதிபதி எஸ். பிரதாப் சிங், செய்தித்துறைச் செயலாளர் திரு. எஸ். இராமகிருஷ்ணன் இ.ஆ.ப., ஆகியோர் பேசினார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. தி. சண்முக ராஜேஸ்வரன். இ.ஆ.ப., ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

# விளையாட்டும் வீரம்!

—கவிஞர் முருகுவண்ணன்



இளமைதான் ஆற்றல் விளைநிலமாம்! ஆண் - பெண்
இருபாலர் வாழ்வின் அடித்தளமாம்!
இளமைக்கு வாய்க்கும் களம்பலவாம்! வாய்த்த
இளமை விளையாட்டும் பற்பல வாம்!

"வாய்த்த இளமை விளையாடற்கே - என்று
வாழ்வைக் குலைக்கும் வகைதவிர்த்தே
வாய்த்த இளமை நிலைபெறவே - செய்யும்
வகைவகை ஆடல் கொண் டாடுவமே!

தமிழர் விளையாட்டாம், 'காவடி'யும் - 'ஒயில்'
தனித்த விளையாட்டாம் ஆடிடலாம்!
தமிழர் இன் றாடும் 'கபடி'யுண்டாம்! - புறம்
தள்ளிமுன் னோடல்போல் ஓடிடலாம்!



நாநீளம் நேர்நெடு 'நீள'மும் - வானினை
நண்ணும் 'உயர'மும் தாண்டிடுவீர்!
பாநாலும் செய் கவி வாணர்தம் - வாழ்வீடர்
போன்ற பல தடை வென்றோடுவீர்!

காலம் வெல் 'நம்பிக்கை', 'பந்து' எனலாம் - வெற்றி
கைப்பட, காலமாம் கைகளினால்,
நாளும் தடுத்தாண்டுக் கொண்டு - செலல்போலும்
நடந்துசெல் காலால், கால்'பந்துஆடு வீர்'!

நெஞ்சத்தில் மேவும் சுமைதாங்கி - வாழ்க்கைசெய்
நேர்மைத் திறத்தீர்! எழுச்சிகொண்டு
நெஞ்சம் நிமிர்ந்திரு தோளுயர்த்தி - கையால்
நிறை 'பளு தூக்கி' நிறுத்திடுவீர்!

# குவியட்டும் வெற்றி!!



கையில் கிடைத்ததை வாயினிலே - சேர்க்கும்
கைத்திறம் போல் 'கூடைப் பந்தா'டுவீர்!
கையில் பறவைச் சிறகினால் - ஆகிய
கவர்ச்சி 'சிறகுப் பந்து'ம் ஆடிடுவீர்!

பூவை நிகர்மென்மை பொன்மை - நிறம்கொண்ட
'பூப்பந்து'ம் பாங்குடன் ஆடிடுவீர்!
மேவி உயர்ந்து செல் 'கைப்பந்தை'க் கையாலே
மேன்மேல் உயர - தட்டி ஆடிடுவீர்!



மெய்ம்மை உரம்கொண்ட ஆண் தகையீர்! - உம்போல்
மெய்கொண்டோர் தம்மோடு 'மற்போர்' செய்வீர்!
மெய்த்தடந் தோளும் கரங்களும் - கொண்டோரே!
வீழாத கைக் 'குத்துச் சண்டை' செய்வீர்!

மெய்வலி காட்டிடும் கைகளுடன்-வன்மை
மேவும் இருதோளும் கொண்டவல்லீர்!
மெய்வலி காட்டுவோர் தம்மை அடித்துமண்
மேல்விழச் செய், 'குத்துச் சண்டை' செய்வீர்!

தமிழ்இளங் காளையீர் வாருங்களே! - தன்னேர்
தமிழ்இளம் பூவையீர் வாருங்களே!
தமிழ்நாடு பேர் புகழ் பெற்றிடவே - நல்ல
தருணம் வந் துற்றது கேளுங்களே!

நல்ல தருணம் இது! "தெற்காசிய - நாடுகள்
விளையாட்டுப் போட்டிகள்" நம் சென்னையில்...!
நல்இளங் காளையீர்! பாவையீர்! - பங்கேற்று
நமக்கே வெற்றியெல்லாம் சேருங்களே!

# கலை வித்தகரின் நலம் காக்க முனைப்புடன் செயல்படும் தமிழக அரசு

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

முத்தமிழ்க் கலைகளையும், அவற்றை முனைப்புடன் வளர்த்த முதன்மைக் கலை வித்தகர்களையும் பாராட்டிச் சிறப்பிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்தும், கலைமாமணி விருது வழங்கும் விழாவில் பங்கு கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

மன வளம் நிறைந்த மக்கள் எங்கே வாழ்கிறார்களோ, அங்கே தான் கலை வளம் மிகுந்து காணப்படும் என்பது, சரித்திரம் காட்டும் உண்மை ஆகும். தமிழகம் என்றும் அருங்கலைகளின் இருப்பிடமாக இருந்து வந்துள்ளது. கலைகளை வளர்ப்பதிலும், கலை வித்தகர்களை ஊக்குவிப்பதிலும், தமிழ்நாட்டிற்கு என்றும் ஒரு தனி இடம் உண்டு. அத்தகைய மாபெரும் கலை உணர்வுக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்பதையும், நமது முன்னோர்கள் கலைகளோடு இணைந்த வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்பதையும், எண்ணிப் பார்க்கும்போது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

கவிதை, பாட்டு, காவியம், கதை, நுண் கலைகள், ஓவியம், சிற்பம் என்று பழந்தமிழ் இலக்கியங்களின் வெளிப்பாடுகளைத் தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகவே கொண்டு, கண்டவர்கள் நம் முன்னோர்கள். காதலாகிக் கசிந்து உருகி, கண்ணீர் மல்கிப் பாடி, இறைவனையே இசை வடிவமாகக் கண்டவர்கள், நம் மூதாதையர்கள்.

பன்னெடுங்காலமாக, நமது முன்னோர்களால் போற்றப்படும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் மேன்மையை மென்மேலும் கட்டிக்காக்கும் வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்பட்டு வருகிறது. இந்த மன்றம், பழம் பெரும் கலைகளைப் பாதுகாக்கும் ஒரு பண்பாட்டு மையமாகவும், கலை வித்தகர்களின் வாழ்வில்,



ஒளியை ஏற்றி வைக்கும் ஒரு தூண்டுகோலாகவும் விளங்கி வருகிறது.

உலகத்தின் மிகத்தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்று தமிழ் மொழி ஆகும். லத்தீன் மொழியைச் சட்ட மொழி என்றும், கிரேக்க மொழியை இசை மொழி என்றும், ஜெர்மன் மொழியைத் தத்துவ மொழி என்றும், ஆங்கில மொழியை வணிக மொழி என்றும் மொழி வல்லுநர்கள் வகைப்படுத்தி, புகழ்வதைப்போல், தமிழ் மொழியை இலக்கிய மொழி என்று பாராட்டி மகிழ்கின்றனர்.

கலை வளர்க்கும் முயற்சியில் இதுவரை 884 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருதுகள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், வழங்கப் பட்டுள்ளன. தமிழகத்தின் கலைஞர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த விருது, தமிழகத்தில் வாழும், மற்ற மாநிலங்களைச் சேர்ந்த சாதனை புரியும் கலைஞர்களுக்கும், வழங்குகின்ற முறையைக் கொண்டு வந்து, கலைக்கு எல்லையில்லை என்பதை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு நிரூபித்துள்ளது.

இதுவரை 228 கலை மேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப் பட்டுள்ளன என்பதை அறியும் போது எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது. நலிவுற்ற கலைஞர் களுக்குத் தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகையை, 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக நாங்கள் உயர்த்தினோம். மேலும் ஆண்டொன்றுக்கு 135 கலை வித்தகர்கள் மட்டுமே ஓய்வூதியம் பெற்று வந்த நிலையை மாற்றி, இன்று ஆண்டொன்றுக்கு 300 நலிந்த கலைஞர்கள் ஓய்வூதியத் தைப் பெறுகின்ற வகையில், பயனாளிகளின் எண்ணிக் கையை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு உயர்த்தி யுள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, கடந்த 20 ஆண்டுகளில், 2,800 நலிந்த கலைஞர்கள் மட்டுமே ஓய்வூதியம் பெற்றுப் பயனடைந் துள்ளனர். ஆனால், 1991–ஆம் ஆண்டு தொடங்கி, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் மட்டும் மொத்தம் 1,500 நலிந்த கலைஞர்கள் ஓய்வூதியம் பெற்று பயனடைந்துள்ளார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

அசுர வேகத்தில் மாறுதல் களைக் கண்டு வருகின்ற விஞ்ஞான உலகில், பல அரிய கலைகள் பாதுகாக்கப்பட வில்லை என்றால், முழுவதுமாக மறைந்து விடும் அபாயம் இருந்து வருகின்றது. குறிப்பாக, சில அபூர்வமான கிராமியக் கலை வடிவங்கள் இத்தகைய அபாயத்தை எப்போதும் எதிர் நோக்கி உள்ளதால் அத்தகைய கலைகளை நாம் பேணிப் பராமரிப்பதோடு, அந்த கலை வடிவங்களை எதிர்காலத்தின்

தேவைக்காகப் பாதுகாத்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இயல் இசை நாடக மன்றத்தை, நான் கேட்டுக் கொண்டதன் பேரில், அந்தக் கலை வடிவங்களை ஆவணங் களாக்கிப் பாதுகாக்கும் பணி, தற்போது நடைபெற்று வருகின்றது. எதிர்காலக் கலை வளர்ச்சிக்கு உதவும் இந்தச் சீரிய பணியை, இயல் இசை நாடக மன்றம், ஒரு கலை வேள்வியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



சென்னை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே. கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க முடியும் என்றிருந்த நிலையை எங்கள் அரசு மாற்றி அமைத் துள்ளது. தமிழகத்தின் கிராமப் புறப் பகுதிகள் சூழ்ந்த சிறு நகரங்களிலும் இன்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலை நிகழ்ச்சிகளை நடத்தி, அங்கு வாழ்கின்ற மக்களும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டு களிப்பதற்கு வழி வகுத்துள்ளது. சலங்கை விழா, ஐம்பெரும் விழா போன்ற பெரிய விழாக்கள், இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதி களில், சீரிய முறையில் நடைபெற்று, தமிழக மக்கள் மத்தியில். கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளதை எண்ணி மன மகிழ்ச்சி அடைகிறேன்.

அருங்கலைகளை வளர்க்க தங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்தி, கலைமாமணி விருது பெறுகின்ற கலை வித்த கர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கலைச்சேவையில் மேற்கொள்ளும் எல்லா முயற்சி களிலும் வெற்றி பெற்று, மேலும் பெயரோடும், புகழோடும், நீண்ட ஆயுளுடனும், வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று நிறைந்த மனதுடன் நெஞ்சார வாழ்த்து கிறேன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர், நாடகச் செம்மல் திரு. R.S.மனோகர் அவர்கள் சற்று முன்பு பேசும்போது. இரண்டு கோரிக் கைகளை, என் முன் வைத் தார்கள். மன்றத்தால் ஆண்டு தோறும் திறந்து வைக்கப் படுகின்ற. கலைவித்தகர்களின் திருவுருவப்படங்களை நன் முறையில் பராமரிப்பதற்கும், பார்வையாளர்கள் அனைவரும் அவற்றை. ஒரே இடத்தில் கண்டு மகிழ்வதற்கு. வழி வகுக்கவும், அரிய இசைக் கருவிகளைப் பாதுகாத்து வைக்கவும் கலைக் கூடம் - Art Gallery ஒன்றை, அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தமிழகத்தின் பாரம்பரியமிக்க கலைகளை வளர்ப்பதிலும் கலை வித்தகர்களின் வாழ்க் கையை மேம்படுத்துவதிலும், ஆழ்ந்த ஈடுபாட்டையும், அக் கறையையும், செலுத்தி வருகின்ற அரசு எங்கள் அரசு. அந்த உணர்வைப் பிரதிபலிக்கின்ற வண்ணம், மன்றத்திற்கெனத் தனியே கலைக்கூடம் - Art Gallery ஒன்று, , தமிழக அரசின் சார்பில் கட்டித்தரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன், இதற் கான ஆயத்துப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடகக் கலையை, நலிந்து விடாமல் பாதுகாக்கப் பல



நடவடிக்கைகளை மேற்கொண்ட எங்கள் அரசு, நாடகக் கலைக் குழுவினர். அரசு பேருந்துகளில் பயணம் செய்யும் போது, 50 சதவீதக் கட்டணச் சலுகையையும் வழங்கி வருகின்றது. இந்தச் சலுகையை, இசைக் கலைஞர்களுக்கும், நாட்டிய மற்றும் கிராமியத்துறை கலைஞர்களுக்கும் வழங்க வேண்டும் என்று திரு. R.S.மனோகர் அவர்கள் வைத்த இரண்டாவது கோரிக்கையையும், ஏற்றுக் கொண்டு, இனி இசைக்கலைக் குழுவினர்களும், நாட்டிய மற்றும் கிராமியக் கலைக் குழுவினர்களும் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் போது, கட்டணத்தில் 50 சதவீத சலுகை வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

எங்கள் அரசைப்பொறுத்த வரையில், கேட்டால்தான் கிடைக்கும் என்பதையும் மீறி, தேவை என்பதை அறிந்தால் விரைந்து செயல்பட எப்போதும் தயாராக உள்ளது. நலிந்த கலை வித்தகர்களுக்குப் பொற்கிழித் தொகையான 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்; அந்த உயர்வு, இந்த ஆண்டு முதலே அமல்படுத்தப்படும் என்பதையும், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் காப்பாளர் என்ற முறையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.




அருங்கலைகளை வளர்ப்பதிலும், நலிந்த கலை வித்தகர்களின் நலம் காப்பதிலும், எங்கள் அரசு எப்போதும் முனைப்புடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, கலைமாமணி விருது பெற்ற கலைமாமணிகள் அனைவருக்கும், மீண்டும் எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

'பொன்னி', 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600 028. தொலைபேசி எண் : 4937471

## 1994 - 95 ஆம் ஆண்டில் "கலைமாமணி" விருது பெறும் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| டாக்டர் இரா. நாகசாமி | – | இயற்கலை - பண்பாட்டு அறிஞர் |
| திருமதி ஆர். வேதவல்லி | – | கர்நாடக இசைக் கலைஞர் |
| மகாராஜபுரம் திரு. கே. நாகராஜன் | – | கர்நாடக இசைக் கலைஞர் |
| திரு. பி. உன்னிகிருஷ்ணன் | – | கர்நாடக இசைக் கலைஞர் |
| போழகுடி திரு. பி.வி. கணேசய்யர் | – | கர்நாடக இசை ஆசிரியர் |
| திருப்பாற்கடல் திரு. எஸ். வீரராகவன் | – | வயலின் இசைக் கலைஞர் |
| சுசீந்திரம் திரு. கிருஷ்ணன் | – | மிருதங்க இசைக் கலைஞர் |
| உமையாள்புரம் திரு. கே. நாராயணசாமி | – | கடம் இசைக் கலைஞர் |
| திரு. ஜி. ஹரிசங்கர் | – | கஞ்சிரா இசைக் கலைஞர் |
| மாயவரம் திரு. டி. எஸ். ராஜாராம் | – | முகர்சிங் இசைக் கலைஞர் |
| டாக்டர் சுமா சுதிந்திரா | – | வீணை இசைக் கலைஞர் |
| சிக்கில் திருமதி. மாலா சந்திரசேகர் | – | புல்லாங்குழல் இசைக் கலைஞர் |
| ஆண்டாங்கோயில் திரு. ஏ.வி. செல்வரத்தினம் | – | நாதசுர இசைக் கலைஞர் |
| மாம்பலம் திரு. எம். கே. எஸ். சிவா | – | நாதசுர இசைக் கலைஞர் |
| திருக்கோகர்ணம் திரு. கே. செல்லையா | – | தவில் இசைக் கலைஞர் |
| தஞ்சாவூர் திரு. என். வீராசாமி | – | கிளாரினெட் இசைக் கலைஞர் |
| கோவை திருமதி கமலா | – | இறையருட் பாடற் கலைஞர் |
| திருக்கோயிலூர் சகோதரிகள்<br>திருமதி எஸ். அலமேலு<br>திருமதி எஸ். புஷ்பா | – | தெய்வீக பக்திப் பாடற் கலைஞர்கள் |
| ஆவுடையார் கோவில்<br>திரு. டி. என். சோமசுந்தர ஓதுவார் | – | தேவார இசைக் கலைஞர் |
| திரு. பி.டி. செல்லத்துரை | – | இசை ஆராய்ச்சிக் கலைஞர் |
| கல்யாணபுரம் திரு. ஆர். ஆராவமுதன் | – | கதா காலட்சேபக் கலைஞர் |
| திருமதி கே. ஜே. சீதா ராஜகோபால் | – | பரதநாட்டிய ஆசிரியை |
| திருமதி ரங்கநாயகி ஜெயராமன் | – | பரதநாட்டிய ஆசிரியை |
| திருமதி சாந்தா தனஞ்செயன் | – | பரதநாட்டியக் கலைஞர் |
| டாக்டர் ஸ்ரீநிதி ரங்கராஜன் | – | பரதநாட்டியக் கலைஞர் |
| டாக்டர் ராஜலட்சுமி சந்தானம் | – | பரதநாட்டிய இசைக் கலைஞர் |
| திரு. கே. முத்துக்கிருஷ்ணன் | – | பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர் |
| திரு. என். எஸ். ரவிசங்கர் | – | நாடக ஆசிரியர் |
| திரு. எஸ். வி. வெங்கடராமன் | – | நாடகத் தயாரிப்பாளர் |
| திரு. பீலி சிவம் | – | நாடக நடிகர் |

| | | |
|---|---|---|
| திருமதி ராணி சோமநாதன் | - | நாடக நடிகை |
| திரு. எஸ். வி. சண்முகம் | - | நாடக நகைச் சுவைக் கலைஞர் |
| திரு. ஜெமினி மகாலிங்கம் | - | தொழில்முறையல்லாத நாடக நடிகர் |
| திரு. வி.டி. அரசு | - | திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. மணிரத்னம் | - | திரைப்பட இயக்குநர் |
| திரு. அர்விந்த்ஸ்வாமி | - | திரைப்பட நடிகர் |
| செல்வி குஷ்பு | - | திரைப்பட நடிகை |
| திரு. ஏ.ஆர். ரகுமான் | - | திரைப்பட இசையமைப்பாளர் |
| திரு. மனோ | - | திரைப்படப் பின்னணிப் பாடகர் |
| திருமதி ஜிக்கி | - | திரைப்படப் பின்னணிப் பாடகி |
| புரிசை திரு. பி.கே. சம்பந்தன் | - | தெருக்கூத்துக் கலைஞர் |
| புலவர் டி. முத்துசுவாமி | - | வில்லுப்பாட்டுக் கலைஞர் |
| மதுரை திரு. என். தவசியா பிள்ளை | - | கரக ஆட்டக் கலைஞர் |
| திரு. ஏ.பி. ஸ்ரீனிவாசன் | - | இசை நாடக நடிகர் |
| கரூர் திருமதி ஏ. சாரதா | - | இசை நாடக நடிகை |
| திரு. ஆர். ஏ. அய்யாச்சாமி தேசிகர் | - | பழம்பெரும் இசை நாடக நடிகர் |
| திரு. என். எஸ். வரதராஜன் | - | இசை நாடகப் பாடலாசிரியர் |
| திரு. டி.எஸ். மருதப்பா | - | இசை நாடக மிருதங்கக் கலைஞர் |
| சேலம் திரு. என்.எம்.வி. வேலன் | - | இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| திரு. ஏ. எஸ். மாணிக்கவாசகம் | - | பொம்மலாட்டக் கலைஞர் |
| திரு. கே. ஆர். சுந்தர ஸ்தபதி | - | கோயிற் சிற்பக் கலைஞர் |
| சிற்பி திரு. டி. கே. செல்லதுரை | - | பாரம்பரிய சிற்பக் கலைஞர் |
| திரு. ஏ. பி. சந்தான்ராஜ் | - | ஓவியக் கலைஞர் |

## பொற்கிழி பெறும் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| "கலைமாமணி" திரு. எஸ். சி. பாலசுப்பிரமணியம் | - | இசை நாடக நடிகர் |
| "கலைமாமணி" திருமதி. டி.எம். பங்கஜா | - | இசை நாடக நடிகை |
| "கலைமாமணி" திரு. டி.பி. வேணுகோபால் பிள்ளை | - | பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர் |

### சுழற்கேடயம் பெறும்

### சிறந்த நாடகக் குழு

**"பூமகள் கலை மன்றம்"** - கோவை

### சிறந்த கலை நிறுவனம்

**"பிரம்ம கான சபா"** - சென்னை.

# கலைவளர்ச்சிக்கு வளமூட்டும் கலைமாமணி விருது வழங்கு விழா

● இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கலை உலகம் வளமாக வளர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு, பல ஆக்க பூர்வமான வளர்ச்சிப் பணிகளைச் செய்துவருகிறார்கள். அவற்றில் சிறப்பு பெறும் ஒரு நிகழ்ச்சி, கலை உலகத்து வித்தகர்களை ஊக்குவிக்கும் உந்துதளமான 'கலைமாமணி' விருது வழங்கும் விழா என்றால் அதுமிகையல்ல. இவ்வாண்டில் சிறப்புப் பெற்ற, தான் மேற்கொண்ட கலைகளில் சாதனைபுரிந்த சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா, சென்னை கலைவாணர் அரங்கில் 22.11.95 அன்று மாலை சீரோடும் சிறப்போடும் நடந்தேறியது.

கலைவாணர் அரங்க வளாகம் முழுவதும் காண்போரின் கண்கள் கவரும் வண்ணம் விதவிதமான வண்ணத் தோரணங்களும், வானுலகத்து நட்சத்திரங்கள் பல நிறங்களில் மண்ணுலகுக்கு வந்தது போல் மின்னுகின்ற வண்ண, வண்ணச் சரவிளக்குகளும் நிரம்பியிருந்தன. செவிக்கினிய மெல்லிய நாயன இசை அரங்கமெங்கும் தென்றலைப் போல் உலவியது.

தமிழ்த்தாய் வாழ்த்தோடு கலைத்தாய்க்குத் தொண்டு செய்யும் கலைமாமணி விருது வழங்கும் விழா தொடங்கியது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தார். அம்மேதைகளில் திருமுருக கிருபானந்த வாரியார் உட்பட 14 மேதைகளின் திருவுருவப் படங்கள் இடம் பெற்றிருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், அப்படங்களைத் திறந்து வைத்ததும், வந்திருந்த பொதுமக்களில், குறிப்பாக, பெண்கள் வாழ்த்தொலி எழுப்பி கரவொலி செய்தனர். பின்னர் நிகழ்ச்சிக்கு வந்திருந்த பார்வையாளர்களை நோக்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையசைத்து அவர்களின் வாழ்த்தொலியை ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் வித்தகம் புரிந்த சாதனையாளர்கள் 54 பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, 'கலைமாமணி' விருதுகளை வழங்கினார்.

**இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான்**

முதலில் இயற்கலை - பண்பாட்டு அறிஞர் டாக்டர் இரா. நாகசாமி விருதைப் பெற்றுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து வரிசையாகக் கலைஞர்கள் வந்து விருதுகளைப் பெற்றுக் கொண்டார்கள். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் சேடபட்டி திரு இரா. முத்தையா அவர்கள் பொற்பதக்கங்களைக் கலைஞர்களுக்கு அணிவிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருதுகளை வழங்கினார். திரைப்பட இயக்குநர் திரு மணிரத்தினம், திரைப்பட நடிகர் திரு அர்விந்தஸ்வாமி, திரைப்பட இசையமைப்பாளர் திரு ஏ.ஆர். ரகுமான்,

பின்னணிப் பாடகர்கள் திரு மனோ மற்றும் திருமதி ஜிக்கி ஆகியோர் விருது பெறும்போது அரங்கத்துள் இருந்த பார்வை யாளர்கள் தங்களுடைய மகிழ்ச்சியையும், பாராட்டையும் உரத்த குரலிலும், ஓங்கிய கையோசையாலும் தெரிவித்துக் கொண்டார்கள்.

**ஸ்ரீநிதி ரங்கராஜன்**

புகழ்பெற்ற பரத நாட்டியக் கலைஞர் டாக்டர் ஸ்ரீநிதி ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி விருதை ஏற்றுக் கொண்டார். உணர்ச்சி வயப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், திருமதி ஸ்ரீநிதி ரங்கராஜனை உச்சிமுகர்ந்து தாய்ப்பாசத்தோடு அணைத்துக்கொண்ட போது அரங்கமே ஒரு நிமிடம் மௌன மாகியது.

**பொற்கிழி**

முன்னரே கலைமாமணி விருது பெற்ற மூத்த கலைஞர்கள் மூன்று பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொற்கிழி வழங்கினார். கோவையைச் சேர்ந்த பூமகள் கலைமன்றம் சிறந்த மன்றமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு சுழற்கேடயம் வழங்கப் பட்டது. அதேபோல் சிறந்த கலைத்தொண்டு புரிந்த சென்னையைச் சேர்ந்த பிரம்ம கான சபாவிற்குச் சிறந்த கலை நிறுவனத்திற்கான விருது வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு இயல் இசை நாடக மன்றத்திற்கும் கலையுலகத்திற்கும் ஆற்றி வரும் பணிகளைப் புகழ்ந்துரைத்தார். தொடர்ந்து மன்ற உறுப்பினர் செயலாளர் திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள் கடந்த ஆண்டு மன்றம் ஆற்றிய பல்வேறு பணிகளைப் பற்றித் திட்ட அறிக்கை வாசித்தார். இயல் இசை நாடக மன்றத்திற்குப் புகழ் பெற்ற கலைஞர்களின் புகைப் படங்களை வைத்துப் பராமரிக்க அருங் காட்சி அறை வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக, மன்ற உறுப்பினர் - செயலர் திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள் தனது கோரிக்கையினை உடன் ஏற்றுச் செயல்படுத்த ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களை நன்றிப் பெரு மிதத்தோடு பாராட்டி நன்றியுரை ஆற்றினார்.

பல்வேறு துறைகளில் கலைத் தொண்டாற்றிய பெருமக்களுக்குப் பாராட்டு முகத்தான் எடுக்கப்படும் இந்த விழா உண்மையிலேயே கலைத்தாய்க்கு பூட்டப்படும் ஒரு பொன் அணியைப் போல, இந்தக் கலைமாமணி விழா, இருந்தது என்றால் அது மிகையல்ல!

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**மா. அசோகன்**

---

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

## முதன் முதலாக...

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் முதன்முதலாக ஆக்கி விளை யாட்டு இடம்பெறுகின்றது. முதன்முறையாக கைப்பந்துப் போட்டிகளில் பாகிஸ்தான் பெண்கள் அணி இடம் பெறுகின்றது. முதன்முதலாக காட்சி விளையாட்டுகளாக தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலம்பம் விளையாட்டும், கோகோ விளையாட்டும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க உள்ளன. முதன்முறையாக 14 விளையாட்டுகள் இப்போட்டி களில் நடைபெறவுள்ளன.



**22.11.95 அன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மறைந்தும் மறையாத, புகழ்மிக்க கலை மேதைகளின் திருவுருவப் படங்கள்**

| | | |
|---|---|---|
| சுவாதித் திருநாள் மகாராஜா | – | சாகித்தியகர்த்தா |
| திருமுருக கிருபானந்த வாரியார் | – | கதா காலட்சேபக் கலைஞர் |
| திருக்குறள் முனிசாமி | – | இயற்றமிழ்க் கலைஞர் |
| துவாரம் வெங்கடசாமி நாயுடு | – | வயலின் கலைஞர் |
| திருவீழிமிழலை எஸ். நடராஜ சுந்தரம் பிள்ளை | – | நாதஸ்வரக் கலைஞர் |
| வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரம் | – | தவில் கலைஞர் |
| கவி. கா. மு. ஷெரீஃப் | – | திரைப்படப் பாடலாசிரியர் |
| டி. ஏ. சண்முகசுந்தரப் புலவர் | – | பழம்பெரும் இசை நாடக நடிகர் |
| எல். வி. பிரசாத் | – | திரைப்பட இயக்குநர் |
| பஞ்சு | – | திரைப்பட இயக்குநர் |
| எஸ். எஸ். சாப்ஜான் | – | பழம்பெரும் இசை நாடக நடிகர் |
| எஸ். டி. சுப்புலட்சுமி | – | பழம்பெரும் இசை நாடக நடிகை |
| ஓ. என். கிட்டு | – | நாடக நடிகர் |
| ஹெரான் ராமசாமி | – | நாடக நடிகர் |



மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை

## ‘சுவாதித் திருநாள்’

*16.4.1813*-ல் திருவனந்தபுரம் அரசு குடும்பத்தில் மகாராணி லட்சுமி பாய்க்குப் பிறந்த சுவாதித்திருநாள், இளமையிலேயே ஆங்கிலம் உட்பட 13 மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். தனது 16-வது வயதிலேயே அரியணை ஏறியது மட்டுமின்றி, பல மொழிகளில் இசைப்பாடல்கள் இயற்றும் ஆற்றலும் பெற்று விளங்கியவர்.

தனது அரசவையில் நாதப்பிரம்மம் தியாகய்யரின் சீடர் கன்னையா உட்பட, அரும்பெரும் கலைஞர்களுக்குச் சரியாசனம் தந்து, கர்நாடக இசையைக் காத்து வளர்த்தவர்.

ஸ்வரஜதிகள், தானவர்ணங்கள், பதவர்ணங்கள், கிருதிகள், பதங்கள், தில்லானாக்கள், ஜாவளிகள், இராகமாலிகைகள் மற்றும் எல்லா வகையான இசைகளையும், இந்துஸ்தானி இசையில் துருவபதங்கள், கயல்கள் ஆகியவற்றையும் இயற்றிய பெருமைக்குரியவர். பக்திரசம் பொங்க அவர் படைத்த நவராத்திரி கீர்த்தனைகளும் நவரத்தின மாலிகைக் கீர்த்தனைகளும் பாவலர்களையும் மயக்கத் தக்கவை.



## கதா காலட்சேபக் கலைஞர்
## 'திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

முத்தமிழ்வித்தகர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் வட ஆற்காடு, காங்கேய நல்லூரில் 25.8.1906ல் பரம்பரைச் சிறப்புமிக்க புலவர் குலத்தில் அவதரித்தவராவார். தாயார் திருமதி. கனகவல்லியம்மையார். தந்தையார் திரு.மல்லையதாச பாகவதர்.

அவர் பெற்ற சிறப்புகள், சாதனைகள், ஆற்றிய திருப்பணிகள் எண்ணற்றவை. இத்தகைய பேறுபெற்ற பெரியார் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, எண்ணரிய மூர்த்தி தலங்கள் தீர்த்தங்களைக் கண்டு வழிபட்ட பெரும் பண்பாளர். அவரது கலை கடவுட் கலை. அவரது கதைகள் யாவும் இறைவன் புகழ்பேசும் இன்னருட் தமிழ்ச் செல்வங்கள். அழகிய எளிய இனிய இலக்கியத் தமிழில்' அவர் வரைந்த நூல்கள் பலப்பலவாகும். அருணகிரிநாதரின் திருப்புகழுக்கு அவர் வரைந்த உரை நூல் என்றும் நின்று நிலைப்பதாகும்.

முத்தமிழ் முறுவலுடன் அருவி நடை வாய்ந்த அவரது ஹரிதைகள் பண்டிதர் முதல் பாமரர் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசப் படுத்துவதோடு, பண்பாளர்களாக்கும் ஆற்றலும் பெற்றவை.

மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை

---

## இயற்றமிழ்க் கலைஞர்
## திருக்குறள் வீ. முனிசாமி அவர்கள்



திருக்குறள் வீ.முனிசாமி அவர்கள் 9.11.1916-ஆம் நாள் தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரத்தில் பிறந்தார். தாயார் வீரம்மாள். தந்தையார் திருவீராசாமி.

1951-ஆம் ஆண்டு குடந்தையில் பெரும் புலவர்களும் பேராசிரியர்களும் கூடிய விழாவில், 'திருக்குறளார்' என்ற பட்டமும், 1954-ஆம் ஆண்டில் சேலத்தில் சர்.பி.டி.ராஜன் அவர்களால் "தமிழ் மறைக் காவலர்" என்ற பட்டமும், 1956-ஆம் ஆண்டில் ரிஷிகேசம் மகரிஷி சிவானந்தர் அவர்களால் "திருக்குறள் கேசரி" என்ற பட்டமும் வழங்கப்பட்டவர். பல அரசியல் தலைவர்களாலும், ஆதீன மடத் தலைவர்களாலும் பொன் னாடைகள், போர்த்திச் சிறப்பிக்கப் பட்டவர். விழுப்புரம் நகராட்சி உறுப்பினராகச் சிறிது காலமும், நாடாளுமன்ற உறுப்பினராக 5 ஆண்டுகளும் தொண்டாற்றிய அவர் தமிழக அரசின் தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநராகவும் 3 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை

---



## வயலின் இசை மேதை
## துவாரம் வெங்கடசாமி நாயுடு அவர்கள்

ஆண்டவன் அளித்த அந்தகப் பிறவியை அரும்பேறாகவும், ஆசானாகவும் தன் மீது அன்பு செலுத்திய அண்ணனை அதினினும் உயர்வாகவும் எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் தனது இடைவிடா முயற்சியால், அதிமேதை வயலின் கலைஞராக, அகிலம் புகழ பவனிவந்தவர் துவாரம் வெங்கடசாமி அவர்கள்.

கஞ்சிரா வாசிப்பதிலும் கைதேர்ந்த பயிற்சி பெற்றிருந்த அவர், கர்நாடக இசைத் தத்துவத்தின் அடிப்படையில் வடநாட்டு மேற்கத்திய இசையை நம் நாட்டு இசைக்குப் பங்கம் வராதவாறு வாசித்து வான்புகழ் எய்தியவராவார்.

தனக்கெனத் தேர்ந்ததோர்த் தனிப்பாணியை வகுத்துக்கொண்டு எண்ணற்ற மாணவர்களுக்கு அவ்வழியில் பயிற்சியளித்து ஒரு புதிய பாரம்பரியத்தை உருவாக்கியவர். தனது காலத்தில் புகழ்க்கொடி நாட்டிய பெருமைக்குரிய இசைவாணர்களுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பதோடு நில்லாமல் தனி வயலின் இசை நிகழ்ச்சிகளையும் கலை விற்பன்னர்கள் கூடிய சபைகளின் முன் நடத்திக்காட்டி, இறுதி வரை யாரும் போற்றும் வண்ணம் பேரும் புகழுமாக வாழ்ந்தவர். தனது வளமான வயலின் இசைக்கலைப் பெருமையை அயல் நாட்டினரும் அறிந்து போற்றச்செய்தவர்.

# மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை



**நாதசுரக் கலைஞர் திருவீழிமிழலை**
**திரு. எஸ். நடராஜ சுந்தரம் பிள்ளை அவர்கள்**

திரு. திருவீழிமிழலை எஸ்.நடராஜசுந்தரம் பிள்ளை அவர்கள் 14.7.1898-ல் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவீழிமிழலை என்ற ஊரில் பிறந்தார்,

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய மாநிலங்களிலும் விஜயநகரம், மைசூர் ஆகிய சமஸ்தானங்களிலும், தருமபுரம் திருவாவடுதுறை ஆகிய ஆதீனங்களிலும் மற்றும் அகில இந்திய மாநிலங்களின் முக்கிய சங்கீத சபைகளிலும் தமது சகோதரரோடு கச்சேரிகள் செய்து, பரிசுகளும் பாராட்டுதல்களும் பெற்றுப் புகழடைந்தவர். பலருக்குக் கலைப்பயிற்சியும் அளித்தவர்.



**தவில் கலைஞர்**
**வலங்கைமான் திரு. ஏ. சண்முகசுந்தரம்**
**அவர்கள்**

வலங்கைமான் திரு.ஏ.சண்முகசுந்தரம் அவர்கள் தஞ்சை மாவட்டச் சேகல்மடப்புரம் என்ற ஊரில் பிறந்தார். தனது ஏழாவது வயதில் அவரது தகப்பனார் ஏ.வி.ஆறுமுகம் பிள்ளையிடம் யாழ்ப்பாணத்தில் தவில் கலை பயில ஆரம்பித்தார்.

தாய்நாடு திரும்பி நாச்சியார் கோயில் பிரபல தவில் வித்வான் திரு.என்.பி.இராகவ பிள்ளையிடமும் கீரனூர் பிரதர்ஸ் திரு.சின்னத்தம்பி பிள்ளை, திரு. கண்ணப்பா பிள்ளையிடமும் மேலும் கலைப் பயிற்சி பெற்று அவர்களுடனும் வாசித்தும், புகழ் பெற்றுள்ளார்.



**திரைப்படப் பாடலாசிரியர்**
**கவி. கா.மு. ஷெரீஃப் அவர்கள்**

கவி.கா.மு.ஷெரீஃப் அவர்கள் தஞ்சை மாவட்டம் அபிவிருத்தீஸ்வரத்தில் 1914-ல் பிறந்தார்.

நாடகத் தொண்டில் ஈடுபட்டிருந்த அவர் கால்நூற்றாண்டு காலமாகத் தமிழ்த் திரைப்படங்களுக்கு 400-க்கும் மேற்பட்ட பாடல்கள் புனைந்தவர். சில திரைப்படங்களுக்குக் கதை வசனமும் எழுதியவர். பல்லாண்டுகளாகப் பத்திரிகை ஆசிரியராகவும், பணியாற்றியவர். நாடகம், நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, அரசியல் ஆகிய பல துறைகளிலும் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியவர். அவர் இயற்கை எய்திய ஆண்டு 1994. மக்கள் பாராட்டும் பல பாடல்களை எழுதிப் புகழ்பெற்றுச் சிறந்த திரைப்படப் பாடலாசிரியராக விளங்கினார்.



**பழம்பெரும் இசை நாடக நடிகர்**
**திரு. டி.ஏ. சண்முகசுந்தரப் புலவர் அவர்கள்**

பழம்பெரும் இசை நாடக நடிகர் திரு.டி.ஏ.சண்முகசுந்தரப் புலவர் 1909-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காம் நாள் தென்காசியில் பிறந்தார்.

தஞ்சை தில்பாதோஸ், அமீர்கான் அலி சாகிப் நாடகக் குழுவிலும், திரு.வள்ளி வைத்தியநாதய்யர் அவர்களின் நாடகக் குழுவிலும் தொடக்கத்தில் நடிக்கப் பயிற்சி பெற்று, பின்னர் மதுரை பால மீனரஞ்சனி சங்கீத நாடக சபாவிலும், திரு.கிருஷ்ணய்யர் அவர்கள் கம்பெனியிலும் ஸ்பெஷல் நாடகங்களிலும் பல்வேறு வேடங்களில் நடித்துப் பலராலும் பாராட்டப் பெற்றவர்.



திரைப்படத் தயாரிப்பாளர்

**எல்.வி. பிரசாத்**

அக்கினேனி லட்சுமி வரபிரசாத ராவ் என்ற திரு.எல்.விபிரசாத் அவர்கள், திரைப்பட வரலாற்றில் மூத்தக் கலைஞராகவும், சிறந்த நிபுணராகவும் விளங்கியவராவார்.

, 1970ல் 'கிலோனா' என்ற இந்திப் படத்தைத் தயாரித்ததற்காக "பிலிம் ஃபேர்" நிறுவன விருதையும், 1980 ல் 'உத்யோக் பத்ரா' விருதையும், 1978 ல் ராஜா சாண்டோ நினைவு விருதையும், 1980ல் 'ரகுபதி வெங்கையா' விருதையும், 1983ல் 'ராம்நாத்' விருதையும், 1983ல் 'கலாதபஸ்வி' விருதையும், 1982ல் 'தாதா சாஹிப் பால்கே' விருதையுமீ, 1985ல் 'கலா பிரபூர்ணா' விருதையும், 1987ல் 'ஆந்திர ரத்னா' விருதையும் மற்றும் பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்று விளங்கியவராவார்.



திரைப்பட இயக்குநர்

**திரு. பஞ்சு அவர்கள்,**

தஞ்சை மாவட்டம் உமையாள்புரத்தில் திருமதி சுப்புலட்சுமி, திரு.சுப்பிரமணியன் தம்பதியர்க்குப் பிறந்தவர் திரு. பஞ்சு அவர்கள்.

அவரது உழைப்பால் பிறந்த முதற்படம் 'பூம்பாவை'. அதுவே 100 நாட்களுக்கு மேல் திரை அரங்குகளில் பிரகாசித்ததாகும். அடுத்தடுத்து அவர் படைத்தவைகளுள் உயர்ந்தவை என்று துவங்கினால் 'தெய்வப் பிறவி', 'குலதெய்வம்', 'குழந்தையும் தெய்வமும்', 'அன்னை', 'உயர்ந்த மனிதன்', 'பைத்தியக்காரன்', 'பராசக்தி', 'சர்வர் சுந்தரம்', 'பிள்ளையோ பிள்ளை' என்று பட்டியல் வளர்ந்து வருமே தவிர முற்றுப் பெறாது. அவற்றில் பலவற்றிற்காகத் தமிழக, மத்திய, அரசின் பரிசுகளையும் பல விருதுகளையும் பெற்றவர்.

## மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை



**இசை நாடக நடிகர்**

**திரு.எஸ்.எஸ். சாப்ஜான் அவர்கள்**

திரு.எஸ்.எஸ்.சாப்ஜான் 1906-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம். மதுரை மாவட்டம் ஒரத்தட்டு என்னும் கிராமத்தில் பிறந்தார். தாயார் உசேன் பீவி. தந்தையார் சந்தாமியான் சாயபு.

தமது 12-வது வயது முதல்-சங்கரதாஸ் சுவாமிகள். பீர் முகம்மது பாவலர். சங்கரலிங்கக் கவிராயர் ஆகிய புகழ்பெற்ற ஆசிரியர்களிடம் நாடக நடிப்புத் துறையில் பயிற்சி பெற்றவர். அந்நாளில், நாடகங்களில் பெண் வேடம் மட்டுமே ஏற்று நடித்த ஆண் நடிகர்கள், வெகு சிலரில் திரு.சாப்ஜான் அவர்கள் சிறப்பு மிக்கவராவார். புராணசரித்திர நாடகங்களில் பெண் பாத்திரங்களில் இணையின்றி நடித்துப் புகழ்பெற்றவர்.



நாடகத் திரைப்பட நடிகை

**திருமதி எஸ்.டி. சுப்புலட்சுமி.**

17.11.1918 ஆம் ஆண்டில் திருநெல்வேலி திரு.துரைசாமி அவர்களின் மகளாகத் தோன்றிய திருமதி எஸ்.டி.சுப்புலட்சுமி அவர்கள் தனது 5-வது வயதிலேயே சிறந்த இசைக்கலைஞராகத் தமிழகத்தில் அறிமுகமானவர்.

பின்னர் மதுரை திரு.சுப்பையாப்பிள்ளை அவர்களின் நாடக மன்றத்தில் இணைந்து முன்னாள் முதுபெருங்கலைஞர் ஏழிசை மன்னர் திரு எம்.கே.தியாகராஜ பாகவதருடன் அல்லி தர்பார், பவளக்கொடி ஹரிதாஸ் கிருஷ்ண துலாபாரம் ஆகிய பிரபல இசை நாடகங்களில் முக்கியப் பாத்திரங்களேற்று நடித்துக் கலையன்பர்களின் பேராதரவைப் பெற்றுப் பிரபலமானவர்.

# மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை



நாடக நடிகர்
**திரு. ஓ.என். கிட்டு அவர்கள்**

திரு.ஓ.என்.கிட்டு அவர்கள் சிதம்பரம் தாலுக்கா ஒடாக்கநல்லூர் கிராமத்தில் பிறந்தவர். தாயார் திருமதி சிவபாக்கியம். தந்தையார் திரு.நடராஜன் தமது பத்தாவது வயதிலேயே கிராமத்தில் நடந்த காமன் பண்டிகைத் திருவிழாவில் மன்மதனாக நடித்தவர் பின்னர், நாடகாசிரியர் திரு.யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை அவர்களின் மதுரை ஸ்ரீ பாலகான சபாவில் சுமார் 12 ஆண்டுகள் நடிகராகப் பணியாற்றி மனோகரா, பதிபக்தி, பம்பாய் மெயில், இழந்த காதல், விமலா, கண்டிராஜா மற்றும் பல நாடகங்களில் கதாநாயகனாக ஆயிரக்கணக்கான தடவைகள் நடித்துப் புகழ்பெற்றவர்.



நாடக நடிகர்
**திரு. ஹெரான் ராமசாமி அவர்கள்**

திரு.ஹெரான் ராமசாமி அவர்கள் 26.8.1933 அன்று நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஆய்க்குடி கிராமத்தில் பிறந்தவர். தாயார் திருமதி கருப்பாயி அம்மாள். தந்தையார் திரு.சுடலை முத்து முதலியார்.

தமது சொந்த நாடகக் குழுவான 'ஹெரான் தியேட்டர்ஸ்' நிறுவனத்தின் மூலமாகச் சிறந்த புராண சரித்திர நாடகங்களைத் தயாரித்துப் பல கலைஞர்களுக்கு நடிப்புப் பயிற்சியும் அளித்துள்ளார். அவர் மாணவர்களில் பலர் நாடகங்களில் மட்டுமின்றி திரைப்படங்களிலும் நடித்துப் புகழ்பெற்று விளங்கி வருகின்றனர். 'நாடகக் காவலர்' திரு.ஆர்.எஸ்.மனோகர் அவர்களது 'சூரபத்மன்' நாடகத்தில் சுக்கிராச்சாரியார் வேடத்தில் திறம்பட நடித்துப் பத்திரிகைகளால் பாராட்டப் பெற்றதுடன் மயிலாப்பூர் அகாடமியால் 'சிறந்த நடிகர்' எனப் பட்டமும் பெற்றவராவார்.

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி
## பேருந்து வசதிகள்

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகளுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொதுமக்கள் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்க வசதியாக சிறப்புப் பேருந்து களை அனைத்து விளையாட்ட ரங்கங்களுக்கும் இயக்க ஆணை பிறப்பித்துள்ளார். அதற்கிணங்க டாக்டர் அம்பேத்கர் போக்கு வரத்துக் கழகம் சிறப்புப் பேருந்துகளை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், புரட்சித்



தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளரங்க விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம், வேளச்சேரி நீச்சல்குள விளையாட்டரங்கம், எழும்பூர் ஆக்கி விளையாட்ட ரங்கம், வீராபுரம், அலமாதி துப்பாக்கிச் சுடும் களம், கலைவாணர் அரங்கம், ஐ.ஐ.டி. வளாகம், சாந்தோம் மேல் நிலைப்பள்ளி ஆகிய இடங் களுக்குச் சென்று வர இயக்க உள்ளது.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு சென்னையில் முக்கியத் தடங் களில் ஓடுகின்ற பேருந்துகளில் ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகளின் இலச்சினையான பாயும் இளஞ் சிங்க உருவப்படம் பொறிக்கப் பட்டுள்ளது.



## ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

# வியக்க வைக்கும் விளையாட்டு நகரம்

தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சியின் விடிவெள்ளி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்து விளையாட்டு வீரர்கள் சர்வதேசப் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று வெற்றிவாகை சூடிட வசதியாக, தொலை நோக்குச் சிந்தனையோடு தமிழ் நாட்டில் சர்வதேசத் தரத்தில் விளையாட்டு அரங்கங்களை நிறுவி, சர்வதேசப் போட்டிகளையும் நடத்தி, தமிழகத்து விளையாட்டு வீரர்களுக்கு ஒரு புதிய உற்சாகத்தை உருவாக்கி வருகிறார். அந்த வரிசையில் தற்போது உலகமே உற்று நோக்கும் விதத்தில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை சென்னை மாநகரத்தில் சீரோடும் சிறப்போடும் நடத்திட அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

சர்வதேசத் தரத்தில் ஏழே மாதத்தில் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தை அமைத்து சாதனைபுரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் நடத்தத் தேவையான விளையாட்டு அரங்கங்களை சர்வதேசத்தரத்தில் அமைத்துள்ளார்.



உலகம் போற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் அமைக்கப்படும், வீரர் - வீராங்கனைகள் தங்குவதற்கான விளையாட்டுக் கிராமத்தைப் போல், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் முதன்முறையாக சென்னையில் விளையாட்டு வீரர்களுக்காகத் தனியே அனைத்து வசதிகளுடன் கொண்ட விளையாட்டுக் கிராமத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.101 கோடி மதிப்பீட்டில் சென்னை

கோயம்பேட்டில் அமைத்துள்ளார்.

**குடியிருப்புகள்**

பதினொரு மாதங்களுக்கு முன்னால் குண்டும் குழியுமாக புதர்கள் மண்டிக்கிடந்த கோயம்பேடு பகுதியில் 35 ஏக்கர் பரப்பளவில் 560 குடியிருப்புகளை காண்போரின் கண்கள் அதிசயிக்கத் தக்க வகையிலே கட்டிமுடித்து இன்னுமொரு சாதனையையும் செய்துள்ளார்.

இந்தக் குடியிருப்புகளில் 304 குடியிருப்புகள் மூன்று படுக்கையறை வசதிகளையும், மீதமுள்ள குடியிருப்புகள் இரண்டு படுக்கையறை வசதிகளையும் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. மேலும் 2,000 பேர் ஒரே சமயத்தில் உணவு அருந்துகின்ற வகையில் மிகப்பெரிய உணவருந்தும் கூடமும், தந்தி மற்றும் தபால் அலுவலகமும், வங்கி வசதியும், வணிக வளாகமும் கட்டப்பட்டுள்ளன.

**பூங்கா**

விளையாட்டு நகர வளாகத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் 9 பூங்காக்கள் உலகப் புகழ்பெற்ற தோட்டக் கலை நிபுணர் திருமதி மஞ்சுளா ராவ் அவர்களின் நேரடிப் பார்வையில் அமைக்கப் பட்டுள்ளன.

விளையாட்டு நகருக்குள் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று வர அனைத்துச்சாலை வசதிகளும், காற்றோட்டமான குடியிருப்பு வசதிகளும் அமைக் கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 2,000 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்க முடியும்.

# சர்வதேசத் தரத்தில் விளையாட்டுக் கருவிகள்

**ச**ர்வதேசத்தரத்தில் விளையாட்டரங்கங்களும், விளையாட்டுக் கருவிகளும் இருக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணையின் படி, ரூ.5 கோடி மதிப்புள்ள விளையாட்டுக் கருவிகள் வெளிநாடுகளிலிருந்து ஏழாவது தெற்காசியப் போட்டிக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

செயற்கை இழையூட்டப்பட்ட ஹாக்கி விளையாட்டுத்தளமும், துப்பாக்கிச் சுடுவதற்குப் பயன்படும் குறிப்பலகை மற்றும் குத்துச்சண்டைக்குப் பயன்படும் கையுறைகள் முதலியன ஜெர்மனி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

ஜூடோ விளையாட்டுக்கான தரை விரிப்புகள், கூடைப்பந்தாட்டப் போர்டுகள், பெல்ஜியத்திலிருந்தும், மற்போருக்குப் பயன்படும் தரைவிரிப்புகள், கைப்பந்து ஆடுதளத்திற்கு வேண்டிய பொருள்கள் முதலியவை பிரான்ஸ் நாட்டிலிருந்தும், வேளச்சேரி நீச்சல் விளையாட்டரங்கில் பொருத்தப்பட்டுள்ள எலக்ட்ரானிக் அறிவிப்புப் பலகை சுவிட்சர்லாந்திலுள்ள ஒமேகா நிறுவனத்திலிருந்தும், கைப்பந்துக் கம்பங்கள், வலைகள் ஜப்பான் நாட்டிலிருந்தும், இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் நடைபெறும் 7-ஆவது தெற்காசியப் போட்டிகளில் பயன்படும் பந்துகள் (அதாவது கைப்பந்துகள், கூடைப் பந்துகள், ஹாக்கிப்பந்துகள், கால்பந்துகள்) யாவும் சிங்கப்பூரிலிருந்து வந்துள்ளன. இது தவிர, சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட எடையைத்தான், பளுதூக்கும் போட்டியில் கலந்து கொள்பவர்கள் தூக்கப்போகிறார்கள் என்பதும் கனமான செய்திதானே!

## ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி



# தங்கம் வென்று குவிப்போம்

## இந்திய அணியினர் நம்பிக்கை

**தெ**ற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் இதுவரை 6 முறை நடைபெற்று தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் வரும் டிசம்பர் 18 முதல் 27 வரை நடைபெற உள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகள்ளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறம்படச் செய்து வருகிறார்கள்.

இதுவரை நடந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் அனைத்திலும் இந்தியா பதக்கம் குவிப்பதில் முன்னணியில் திகழ்ந்து வந்திருக்கிறது. தற்போது நடைபெறப் போகும் இப்போட்டியிலும் இந்தியத் திருநாட்டிற்குத் தங்கப்பதக்கங் களைக் குவிக்க நமது அணிகள் தயாராக இருக்கின்றன.

இப்போட்டிகளில் மொத்தம் 14 விளையாட்டுகளும் சிலம்பம் மற்றும் கோகோ ஆகிய இரு விளையாட்டுகள் காட்சி விளையாட்டுகளாகவும் சேர்க் கப்பட்டுள்ளன. போட்டிகளின் அனைத்து விளையாட்டுப் பிரிவுகளிலும் இந்திய அணி இடம் பெற்றிருப்பது சிறப்பம்ச மாகும். அனைத்துப் போட்டி களிலும் நம் வீரர்களும், வீராங் கனைகளும் வெற்றிகளைக் குவிப்பதற்காகத் தயாராகி வருகிறார்கள்.



### கபடிப் போட்டி

தொடர்ந்து 4 முறை தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியக் கபடி அணி பங்கேற்று தங்கப் பதக்கங்களைக் குவித்த வீர வரலாறு உண்டு. ஆனால், அண்மையில் ஆறாவது




கபடிப்போட்டி

தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடந்த டாக்கா நகரில் எதிர்பாரா விதமாக இந்திய அணி பாகிஸ்தான் அணியிடம் வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது. அதன் பின்னர், எந்தெந்த நுணுக்கங்களைக் கையாளுவதற்குத் தவிறவிட்டார்களோ, அவற்றையெல்லாம் சரிசெய்து ஆட்ட வீரர்களின் திறமையை அதிகப்படுத்தும் வகையில் கடுமையான பயிற்சிகளை அளித்து, புதிய இளம் வீரர்களையும் சேர்த்திருப்பதன் காரணமாகத் தற்போது இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு ஒளிமயமாக உள்ளது.

இந்தியக் கபடி அணியில் பல முறை தங்கத்தை வென்று சர்வதேச அளவில் போட்டிகளில் பங்கேற்ற பட்டறிவுப் படைத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு பாஸ்கரன் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரைத் தவிர தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு முருகானந்தம், திரு சாமியப்பன், திரு வைத்தியலிங்கம் ஆகியோர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

திரு ஹொன்னப்பா, திரு ராம்மேகர், திரு ஓம்பிரகாஷ், திரு ரமேஷ், திரு தரம்வீர் சிங்,



கூடைப்பந்தாட்டம்

திரு ராகேஷ்குமார், திரு லோகேந்தர்பால், திரு எச்.என். கட்டாரியா ஆகியோர் இந்திய அணியில் உள்ள மற்ற வீரர்கள் ஆவர்.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கபடிப் போட்டியின் தலைவர் திரு பி. பாண்டியன், இ.கா.ப. அவர்கள், “இந்த முறை நிச்சயம் இந்தியக் கபடி அணி தங்கம் வெல்லும். அதற்கான கடும் பயிற்சிகளை நம் அணியினர் பெற்றுள்ளார்கள்” என்று தெரிவித்தார். அணியின் தலைவர் திரு பாஸ்கரன் பேசும்போது, “நமது அணி வீரர்கள் குறிப்பாக சாமியப்பன், முருகானந்தம், வைத்தியலிங்கம், கட்டாரியா, லோகேந்திரபால், ஹொன்னப்பா ஆகியோர் களத்தில் பாடிச் சென்று (ride) எதிர் அணியை வீழ்த்துவதில் வல்லவர்கள். இதுதவிர, நமது அணி வீரர்கள் தற்காப்புக் கட்டுக்கோப்பிலும் கடுமையான, பயிற்சிகளைப் பெற்றுள்ளார்கள். எனவே இம்முறை நிச்சயமாகத் தங்கத்தை வென்று வாகை சூடுவோம். கபடி விளையாட்டிற்கும் மற்ற விளையாட்டு வளர்ச்சிக்கும் காப்பரணாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு பெருமை சேர்ப்போம்” என்று உறுதியோடு கூறினார்.

கபடிப் போட்டிகள் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேரு பூங்காவில் **19.12.95** முதல் **22.12.95** முடிய நான்கு நாட்களுக்கு நடைபெறும். இப்போட்டிக்காகவே சிறப்பாக

அமைக்கப்பட்ட மின்னொளி ஆடுகளத்தில் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.



கைப்பந்துப்போட்டி

**கூடைப்பந்துப் போட்டி**

கூடைப்பந்து விளையாட்டு, தெற்காசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் **1987-ஆம்** ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற போதுதான் சேர்க்கப் பட்டது. இந்தியக் கூடைப்பந்து அணி **1987-ஆம்** ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும், பின்னர் **1991-இல்** பாகிஸ்தான், இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற போட்டிகளிலும் வெற்றிவாகை சூடி தங்கத்தை வென்றது. தற்போது இளம் வீரர்களை அணியில் சேர்த்து அணியின் திறமையை அதிகப்படுத்தி பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்ற, திரு. சன்னி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் சென்னை கீழ்ப்பாக்கத்தில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கத்தில் டிசம்பர் **19** முதல் **21** முடிய **3** நாட்களுக்கு நடை பெறவுள்ளது. இப்போட்டிகளில் இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நான்கு நாடுகளே பங்கு பெற்றாலும் கடும் போட்டி இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் தான் நடைபெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தியக் கூடைப்பந்துப் அணியின் தலைவர் திரு சன்னி அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் நிச்சயமாக இந்தியக் கூடைப் பந்து அணி தங்கத்தை வெல்லும் என்று நம்பிக்கையோடு தெரிவித்துள்ளார்.

**இந்தியக் கைப்பந்து அணி**

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு இந்தியக் கைப்பந்து ஆண்கள் அணியும் மற்றும் பெண்கள் அணியும் கலந்துகொள்கின்றன. **1987-ஆம்** ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற போட்டிகளிலும், **1991-ஆம்** ஆண்டு இஸ்லாமாபாத்தில் நடைபெற்றப் போட்டிகளில் மட்டுமே இந்திய ஆண்கள் கைப்பந்து அணி வெற்றி பெற்றுள்ளது. சென்றமுறை டாக்காவில் நடைபெற்ற ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியக் கைப்பந்து ஆண்கள் அணி வெற்றிவாய்ப்பை இழந்து விட்டதால், தற்போது வீரர்களிடையே கடுமையான பயிற்சிகளையும், புதிய நுணுக்கங்களையும் கற்றுக்கொடுத்துள்ளதாக அணியின் பயிற்றுநர் திரு பாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெண்கள் கைப்பந்து அணி **1993-ஆம்** ஆண்டு டாக்காவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கத்தை வென்று வந்தது. அதே நிலையில் வலுவுள்ள அணியாக இருந்து வருவதாலும், தொடர்ந்து பெங்களூரில் கடும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டதாலும் இந்தியப் பெண்கள் கைப்பந்து அணி இம்முறையும் தொடர்ந்து தங்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் என்று அணியின் பயிற்சியாளர் திரு பி.ஜி. நாயர் தெரிவித்துள்ளார்.

கைப்பந்துப் போட்டியைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமே கடும் போட்டி இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. சென்னையில் நடைபெறும் போட்டிகளில் இந்தியா, நேப்பாளம், பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கின்றன.

போட்டிகள் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா

உள்ளுறை விளையாட்டரங்கில் டிசம்பர் மாதம் 22 முதல் 26 முடிய ஐந்து நாட்களுக்கு நடைபெறும்.

### இந்திய நீச்சல் வீரர்கள்

நீச்சல் போட்டியைப் பொறுத்தவரை இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரங்களான சபாஸ்டியன் சேவியர், சுரேஷ் குமார், அபிஜித் ஆகியோர் இம்முறையும் நிச்சயம் தங்கத்தை வெல்வோம் என்று நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்கள். சபாஸ்டியன் சேவியர் 1991-ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற போட்டிகளில் தங்கத்தை வென்றவர். அதேபோல் அபிஜித் 1993-ஆம் ஆண்டு டாக்காவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் தங்கத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் முயற்சியினால் சர்வதேசத் தரத்தில் வேளச்சேரியில் புதிதாகக் கட்டப்பட்ட நீச்சல் விளையாட்டரங்கம், தங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று பெருமையோடு வீரர்கள் தெரிவித்தார்கள். இவ்விளையாட்டரங்கம் மூலம் தங்களுடைய நீச்சல் திறமைகளைப் பன்மடங்காகப் பெருக்கி தாய் நாட்டிற்குத் தங்கத்தை எளிதில் கொண்டு வருவோம் என்று கூறியுள்ளார்கள்.



சபாஸ்டியன் சேவியர்




### டென்னிஸ்

இந்திய டென்னிஸ் விளையாட்டின் நம்பிக்கை நட்சத்திரமான தமிழ்நாட்டைச் சேர்ந்த நிருபமா நிச்சயம் தங்கத்தை வெல்லுவார் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற முறை நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்றாலும் இம்முறை இந்திய டென்னிஸ் விளையாட்டில் தங்கம் வெல்லும் என்று நிருபமா தெரிவித்துள்ளார்.

மகளிருக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே மோதுகின்றன. டென்னிஸ் விளையாட்டுகள் சர்வதேசத் தரத்தில் நுங்கம்பாக்கத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் கட்டப்பட்டுள்ள டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் டிசம்பர் மாதம் 19 முதல் 23 முடிய நடைபெறவுள்ளது. அனைத்துப் போட்டிகளிலும் 41 வீரர் வீராங்கனைகள் பங்குபெற உள்ளார்கள்.

### இந்திய ஆக்கி அணி

சர்வதேசத் தரத்தில் சென்னை, எழும்பூரில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் அமைக்கப்

பட்டுள்ள ஆக்கி விளையாட் டரங்கில் தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகள் வரலாற்றில் முதன்முறையாக ஹாக்கி விளையாட்டு இடம் பெற்று நடைபெறப்போகிறது. ஹாக்கி விளையாட்டில் இந்திய அணிக்கு திரு பர்கத் சிங் தலைவராக இருக்கிறார். அவருக்கு உறுதுணையாக திரு முகேஷ் குமார் எனும் முன்னணி ஆட்டக்காரர் இருக் கிறார். ஹாக்கி விளையாட்டைப் பொறுத்தவரையில் ''கோல்டன் பாய்'' என்று அழைக்கப்படும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஷாபாஸ் அகமது என்பவருக்குச் சவாலாக திரு முகேஷ்குமார் இருப்பார் என்று ஹாக்கி விளையாட்டு ஆர்வலர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. ஹாக்கி விளையாட்டில் நிச்சயமாகப் பாகிஸ்தானை முறியடித்து தங்கத்தைச் சேர்ப்போம் என்று அணியின் தலைவர் திரு பர்கத் சிங் கூறியுள்ளார்.


டென்னிஸ் நட்சத்திரம் நிருபமா

**தடகளப் போட்டிகள்**

தடகளப் போட்டிகளில் இந்திய அணியின் அதிவேக ஓட்டக் காரர்களான திரு ராஜீவ் பாலகிருஷ்ணன், திரு ஆனந்த நடராஜன், திருமதி ஷைனி வில்சன் ரோசாகுட்டி, சோலைமதி, பகதூர் பிரசாத் ஆகியோர் நிச்சயம் தங்கத்தை இந்தியாவுக்காகத் தக்க வைப்பார்கள் என்பது திண்ணம்.

இந்திய அணியின் தலைவராக உள்ள திருமதி பி.டி. உஷா நிச்சயம் தங்கத்தை வென்று சிறப்பைத் தருவார் என்று எதிர்பார்க்கலாம்.

தடகளப் போட்டிகள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் அமைக்கப்பட்ட ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் டிசம்பர் மாதம் 20 முதல் 24 முடிய நடைபெறவுள்ளது. உறுப்பு நாடுகளிலிருந்து 240 வீரர் வீராங்கனைகள் இப் போட்டிகளில் பங்குபெறு கிறார்கள்.



**குத்துச் சண்டை**

சென்னையைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர் தேவராஜன் மற்றும் 10 பேர் கொண்ட இந்திய அணி சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் டிசம்பர் மாதம் 22 முதல் 26 முடிய நடைபெற வுள்ள குத்துச் சண்டைப் போட்டிகளில் பங்குபெற உள்ளார்கள். இந்தியாவிற்கு



ஆக்கி விளையாட்டு

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெறுவதால் இந்திய மண்ணுக்குச் சிறப்பைத் தரும் நம் அணி வீரர்கள் சிறப்பாக பங்கேற்று வெற்றி வாகைச் சூடித்தருவார்கள். இம்முறையும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் இந்தியாவை முன்னிலைப்படுத்துவார்கள். இந்த வெற்றி வாய்ப்புக் கெல்லாம் பின்னணியில் இருந்து ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்த வேண்டும் என்று கடுமையான முயற்சி களை மேற்கொண்டு, தமிழகத் திற்கும், இந்தியத் திரு நாட்டிற்கும் சர்வதேச அளவில் புகழைத் தேடித்தரும் வகையில் ஈடும் இணையும் இல்லாத வகையில் செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும்.

நிச்சயம் தங்கத்தைத் தருவோம் என்று திரு தேவராஜன் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார். இதேபோல் ஜூடோ மற்றும் துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் இந்திய அணியினர் குறிப்பிடத் தக்க வெற்றிகளைப் பெறு வார்கள் என்பதில் ஐயமில்லை.

— மா. அசோகன்

# பங்கு பெறாத போட்டிகள்

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு விளையாட்டு இடம்பெற வேண்டுமானால் தெற்காசிய விளையாட்டு இணையத்திலுள்ள ஏழு உறுப்பு நாடுகளில் குறைந்தது மூன்று நாடுகள் அந்த விளையாட்டில் பங்குபெற வேண்டும். இல்லையேல் அந்தக் குறிப்பிட்ட விளையாட்டு, போட்டிகளில் இடம் பெறாது. போட்டி யிலிருந்து நீக்கப்படும்.

அந்த வரிசையில் சென்னையில் நடைபெறும். ஏழாவது தெற்காசிய. விளை யாட்டுப் போட்டிகளில் 5 கி.மீ. நடைப்போட்டி, உயரம் தாண்டுதல், கம்பு ஊன்றித் தாண்டுதல் (Pole vault) சங்கிலிக் குண்டு எறிதல் ஆகியவை இடம்பெறா.

பெண்கள் பிரிவில் 100 மீ. தடை ஓட்டம், மராத்தான், 10 கி.மீ நடைப்போட்டி, ஹெப்டத்லான், கூடைப்பந்து, மகளிர் நீச்சல் ஆகியவை இடம்பெறா.

ஆண்களுக்கான துப்பாக்கிச் சுடும் போட்டியில் நடுவில் சுடுதல் (Centre Fire) போட்டி இடம்பெறவில்லை. நீச்சலில் உயரத்திலிருந்து பாய்ந்து குதித்தல் (Diving) இடம்பெறாது.

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்: தயாராக உள்ள பதக்கங்கள்

**செ**ன்னையில் நடைபெற விருக்கும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 14 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. மொத்தம் 916 பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

இதில் 285 தங்கப் பதக்கங்களும், 292 வெள்ளிப் பதக்கங்களும், 339 வெண்கலப் பதக்கங்களும் அடங்கும். ஒவ்வொரு பிரிவிலும் வழங்கப்படும் பதக்கங்கள் விவரம் வருமாறு:



| விளையாட்டு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| தடகளம் | | | |
| ஆண்கள் | 24 | 28 | 28 |
| பெண்கள் | 21 | 24 | 24 |
| குத்துச்சண்டை | 12 | 12 | 24 |
| கூடைப்பந்து | 12 | 12 | 12 |
| கால்பந்து | 20 | 20 | 20 |
| ஜூடோ | 9 | 9 | 18 |
| ஆக்கி | 16 | 16 | 16 |
| கபடி | 12 | 12 | 12 |
| துப்பாக்கி சுடுதல் | | | |
| ஆண்கள் | 36 | 36 | 36 |
| பெண்கள் | 20 | 20 | 20 |
| நீச்சல் | 25 | 25 | 25 |
| டேபிள் டென்னிஸ் | 17 | 17 | 25 |
| டென்னிஸ் | 17 | 17 | 25 |
| **கைப்பந்து** | | | |
| ஆண்கள் | 12 | 12 | 12 |
| பெண்கள் | 12 | 12 | 12 |
| பளுதூக்குதல் | 10 | 10 | 10 |
| மல்யுத்தம் | 10 | 10 | 20 |
| **மொத்தம்** | **285** | **292** | **339** |

# தடகளப் போட்டி-இந்திய அணி

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் தடகள அணிக்கு திருமதி.பி.டி.உஷா தலைமை வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் ஏற்கெனவே ஒலிம்பிக் போட்டிகளிலும் **1987**ஆம் ஆண்டு நடந்த தெற்காசியப் போட்டிகளிலும் தடகளப் போட்டிகளில் வென்று இந்தியாவிற்குத் தங்கம் தேடித் தந்தவர்.

**ஆண்கள் அணி:**

திருவாளர்கள்:

ராஜீவ் பாலகிருஷ்ணன்
ஆனந்த நடராஜன்
விக்ரம்சிங்
அமிட்கன்னா
ரூடி வர்கீஸ்
பரம்ஜித் சிங்
சித்தார்த் பஸக்
ஜோராசிங்
ராஜ்வீர்சிங்
பகதுர் பிரசாத்
அமந்தீப்சிங்
குலாப்சந்த்
கே.சங்கர்
பி.எஸ்.லோனே
பல்கார்சிங்
நரீந்தர்சிங்
ரஞ்சித் நந்தாவா
பாலமுருகன்
மனீந்தர்சிங்
ஜோஜி மாத்யு
எஸ்.சஞ்சீவன்
கே.எம்.போப்பையா
சந்தர் பால்
பிரேம்சந்தர் சிங்
பி.எஸ்.வினோத்
சக்திசிங்
பகதூர் சிங்
அஜித் பதுரரியா
ஜகதீஷ்சிங்



**பெண்கள் அணி:**

அனுராதா பிஸ்வால்
ஈ.பி.ஷைலா
எம்.கே.ஆஷா
டி.லாவண்யா,
கமலா சித்து
பாண்டீஸ்வரி,
ஆன்சி பிலிப்
ஜெபிமோல் ஆபிரஹாம்
பாபி அலோசியஸ்
கே.கே.சுனிதா,
எஸ்.ஜெயந்தி
பி.டி.உஷா,
அமன்தீப்கவுர்
ஷைனி வில்ஸன்,
ஹர்பன்ஸ் கவுர்
ரோசாகுட்டி,
நீலம் ஜே.சிங்
கே.எம்.பீனாமோல்,
ஸ்வரன்ஜித் கவுர்
சுஷ்மா பேரா
சசிகலா யாதவ்,
எம்.ஏ.மோலி
மாதுரி சேக்ஸனா
கல்பனா மொண்டல்
எல்.லீலாம்மா
உஷா வர்மா
பி.என்.சுமாவதி
குர்மித் கவுர்
வனஜா,

இந்தியத் தடகள அணிக்கு திரு.பகதூர் சிங் பயிற்சியாளராக இருப்பார். திரு. ஹர்பன்ஸ் சிங், பி.கந்தியாட், ஹர்கோபிந் சிங், டி.பி.யோசப், . எஸ்.பிச்சையா, ஆகியோர் பயிற்சி உதவியாளர்களாக இருப்பார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556.95


பதிவு எண் M. 8676
Licence No.TN/MS(C)/PP-23
மாநில திரைப்பட விருது
வழங்கும் விழா 24.11.95
மாநில திரைப்பட விருது 1993
வழங்கியவர்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள்